Registered as

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 04 சனிக்கிழமை (19.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 358

# மஹிந்தவின் வெற்றி தலைவர் பிரபாகரனின் வெற்றிக்கு வாய்ப்பாக அமையப்போகிறது!

## புலிகள் பிரமுகர் பாலகுமாரன் கருத்து



கிளிநொச்சி,நவ.19

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பெற்ற வெற்றியானது தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வெற்றிக்கு வாய்ப்பாக அமையப்போகிறது.

- இப்படிக் கருத்துக் கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் வே.பாலகுமாரன்.

'புலிகளின் குரல்' வானொலியில் நேற்று ஒலிபரப்பாகிய கருத்துப் பகிர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே பாலகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் எங்களுக்கு ஒரு நினைவினை மீட்டுக்கொண்டு வருகிறது. குறிப்பாக மஹிந்தவே தனது வெற்றி ஏற்பட்ட பிறகு, தேர்தல் ஆணையாளரால் வெற்றி அறிவிக்கப்பட்ட பின்னர் கூறிய செய்தி 1956ஆம் ஆண்டை நினைவுபடுத்துகிறது. அன்று பண்டா வென்றதைப் போன்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

உண்மையிலேயே நாங்கள் தமிழ் பேசும் மக்களுக்கும் இதைத்தான் கூறுகிறோம்.

அதாவது, இந்தத் தேர்தல் என்பது 1956 ஆம் ஆண்டு சம்பவம் போல் தொடர்புபடுகிறது. இன்னொரு பண்டா சகாப்தம் என்று மஹிந்தவே கூறியிருக்கின்றார். 1956ஆம் ஆண்டுக்கு முன்னர்,பின்னர் என்று பார்த்தீர்கள் எனில் 1956ஆம் ஆண்டின் விளைவாகத்தான் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் கருக்கள் விதைக்கப்பட்டன.

எங்களுடைய தேசியத் தலைவர் அவர்களே 1958ஆம் ஆண்டுக் கலவரம் பற்றி எல்லாம் கூறியிருக்கிறார்.

பண்டாவினது செயற்பாடு காரணமாக - சிங்கள தேசியத்தை ஒன்றிணைத்து - பௌத்த பிக்குகளை ஒன்றிணைத்து - கட்சிகளை ஒன்றிணைத்து இப்பொழுது மஹிந்த செய்ததைப் போல அதே மாதிரியாக ஒன்றிணைத்து மிக முக்கியமான மொழிச் சிக்கலை தேசியவாத

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியாக மஹிந்த இன்று பதவியேற்கிறார்!

## பிரதம நீதியரசர் முன்பாக சத்தியப்பிரமாண நிகழ்வு

கொழும்பு,நவம்பர்19

**இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் ஐந்தாவது ஜனாதிபதியாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த மஹிந்த ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் இன்று பிற்பகல் 1.14 மணியளவில் சுபநேரத்தில் - ஜனாதிபதி மாளிகையில் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்கிறார்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 48 லட்சத்து 87 ஆயிரத்து 152 வாக்குகளை - செல்லுபடியான வாக்குகளில் 50.29 வீதத்தை - பெற்று ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.

தற்போது, பிரதமராகப் பதவிவகித்து வரும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று 59 ஆவது பிறந்ததினமாகும். பிறந்ததினப் பரிசாக ஜனாதிபதித் தேர்தல் வெற்றி அவருக்கு நேற்றுக் கிட்டியது.

மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க 47 லட்சத்து 6 ஆயிரத்து 366 வாக்குகளுடன் 48.43 வீத வாக்குகளை மாத்திரமே பெற்றுத் தோல்வியடைந்தார்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில், வடக்கு -

(14ஆம் பக்கம் பார்க்க)



வெற்றிக்களிப்பில் மஹிந்த

## மஹிந்தவுக்கு சொல்ஹெய்ம் வாழ்த்து

ஒஸ்லோ,நவ.19

இலங்கையின் புதிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டிருப்பது குறித்து நோர்வே அவருக்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கிறது. (14ஆம் பக்கம் பார்க்க)

## மந்திகையில் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பொலீஸார், படையினர் மீது சூடு!

யாழ்ப்பாணம்,நவ.19

மந்திகை சிலையடியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி கட்சியின் அலுவலகத்தில் கடமையில் இருந்த பொலீஸார் மற்றும் படையினர் மீது நேற்று முற்பகல் 10.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால், அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் உடனடியாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் அங்கிருந்து பலாலி இராணுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனத் தெரிகிறது.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்று சம்பவத்தை நேரில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் பதவி அநுராவுக்கு இல்லை டி.எம்.ஜயரட்ணவுக்கு எனத் தகவல்

இன்று ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இதனால் ஏற்படும் பிரதமர் பதவி வெற்றிடத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அமைச்சர் டி.எம்.ஜயரட்ணவை நியமிக்கத் தீர்மானித்துள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவைப் பிரதமராக நியமிப்பதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு ஏற்கனவே தீர்மானமொன்றை எடுத்திருந்தது என்பது தெரிந்ததே.

ஆனாலும், ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் முறையாகக் கலந்துகொள்ளாமல், மஹிந்த ராஜபக்ஷவிற்கெதிரான கருத்துகளைத் தெரிவித்துவந்த அனுரா பண்டாரநாயக்காவிற்கு பிரதமர் பதவி வழங்கப்படக்கூடாதென்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று மஹிந்த ராஜபக்ஷவிடம் அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டனர்.

இதனையடுத்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான டி.எம். ஜயரட்ணவை இந்தப் பதவியில் அமர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றவுடன் அமைச்சர் டி.எம்.ஜயரட்ண பிரதமர் பதவியை ஏற்பாரென்று பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அமைச்சரொருவர் நேற்றிரவு 'உதயனு'க்குத்தெரிவித்தார்.

அமைச்சரவையிலும் சில மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. (ஐ-க)

## தேர்தலில் தமக்குக் கிட்டியது தோல்வியல்ல சமாதானத்துக்கான சவால் என்கிறார் ரணில்

கொழும்பு,நவ.19

நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் எதிர்கொண்டது தோல்வியல்ல, சமாதானத்திற்கெதிராக விடுக்கப்பட்ட சவாலே அது. சமாதானம் தொடர்பாக மக்கள் பிழையாக விளங்கிக்கொண்டதன் காரணமாக இந்த முடிவை நான் சந்திக்க நேர்ந்தது.

இந்தத் தேர்தலில் மக்கள் மூன்று பிரிவுகளாப் பிரிந்துள்ளனர். சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும் என ஒரு பிரிவினரும், சமாதானம் தொடர்பான பிழையான விளக்கங்களுடன் இன்னொரு பிரிவினரும் வாக்களித்துள்ளனர். மூன்றாவது பிரிவினர் சமாதானம் பற்றியோ, இத்தேர்தலின் முக்கியத்துவம் பற்றியோ அறிந்துகொள்ளாமல் தேர்தலைப் பகிஷ்கரித்துள்ளனர்.

இந்த முடிவானது, சமாதான முன்னெடுப்பில் தாக்கத்தை உண்டுபண்ணும் விதத்தில் அமைந்துள்ளது. இருந்தும் சமாதானம் பற்றியும், இத்தேர்தலின் முக்கியத்துவம் பற்றியும் சரியான முறையில் உணர்ந்து எனக்கு வாக்களித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

- இவ்வாறு நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார். அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது:-

நடந்துமுடிந்த இந்த ஜனாதிபதித் தேர்தல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு – கிழக்கில் வாக்களிப்பு மீள நடத்த கோருகிறது வன்முறை கண்காணிப்பு மையம்

கொழும்பு,நவ.19

சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி தெரிவாவதற்காக வடக்கு - கிழக்கில் மீண்டும் தேர்தலை நடத்துமாறு தேர்தல் ஆணையாளர் கோரப்பட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் நேற்று வெளியிட்ட விசேட அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேர்தல் தினமான நவம்பர் 17 ஆம் திகதி தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் வடக்கு - கிழக்கு முழுவதும் அதன் கண்காணிப்புக் குழுவை களத்தில் இறக்கியிருந்தது. நடமாடும் தேர்தல் அவதானிகள் அடங்கிய குழுவையும் களத்தில் அவதானிப்புப் பணியில் நியமித்திருந்தது.

தேர்தல் பரப்புரைக் காலத்திலும், தேர்தல் தினத்திலும் வடக்கு - கிழக்கில் நிலவிய சூழல், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை அங்கு நடத்துவதற்கான பொருத்தமாக - உசிதமாக - இருக்கவில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அர்த்தமுள்ள சமாதானத்தை ஏற்படுத்த மஹிந்த உறுதியளிப்பு

கொழும்பு, நவ.19

ஜனாதிபதிப் பதவியென்பது எனக்கு வழங்கப்படும் சிறப்புரிமையல்ல. மக்களின் பணியை நிறைவேற்றக் கிடைத்திருக்கும் தற்காலிக பொறுப்பாகும். நிலையான அபிவிருத்தியையும், அர்த்தமுள்ள சமாதானத்தையும் ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுப்பேன்.

- இவ்வாறு உறுதியளித்தார் இன்று ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள மஹிந்த ராஜபக்ஷ. நேற்று தேர்தல்கள் செயலகத்தில் ஜனாதிபதித் தேர்தல் இறுதிமுடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அங்கு உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இன்றைய நிலையைப் பார்க்கும்போது 1956ஆம் ஆண்டில் அமரர் பண்டாரநாயக்காவின் சமூகப் புரட்சி எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. எனது தந்தையாரான டி. ஏ.ராஜபக்ஷ, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் அதில் பெரும் பங்கு வகித்திருந்தனர்.

இந்த ஜனாதிபதித்தேர்தலில் இடதுசாரிகள், கம்யூனிஸ்ட்டுகள், தொழிற்சங்கங்கள் உட்படப் பலரை பிரதிநிதித்துவப்படுத்தி பொது வேட்பாளராக நான் போட்டியிட்டேன் . மக்கள் என் மீது வைத்த நம்பிக்கையை சிதறடிக்காமல் அவர்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் பூர்த்திசெய்து அர்த்தமுள்ள சமாதானமொன்றை ஏற்படுத்துவது எனது பொறுப்பு. எமது சிறுவர்களுக்கு சிறந்தவொரு எதிர்காலம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

தேர்தல்அமைதியாகவும், நீதியாகவும் நடைபெறுவதற்கு ஒத்துழைத்த முப்படையினர், பொலீஸார் மற்றும் எனது நண்பர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அனைத்து வேட்பாளர்களுக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களின் தலைவனாக ஜனாதிபதிப் பதவியில் இருந்தாலும் அனைவரினதும், நண்பனாக, ஊழியனாக, தொண்டனாக நான் செயற்படுவேன்.

- இவ்வாறு மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறினார். (ஐ-க)



இன்று ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தேர்தல் வெற்றியுடன் தமது பிறந்தநாளை கேக் வெட்டிக் கொண்டாடினார்.

# பிரபாகரனைச் சந்திக்க ஆவலாக இருக்கின்றாராம் மஹிந்த

கொழும்பு, நவ.19

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு தாம் ஆவலாக இருக்கின்றார் என மீண்டும் தெரிவித்திருக்கின்றார் இன்று ஜனாதிபதியாக பொறுப்பேற்கவுள்ள மஹிந்த ராஜபக்ஷ.

ஜனாதிபதித் தேர்தலை தமிழர் தாயக மக்கள் புறக்கணிப்பர் என விடுதலைப்புலிகள் விடுத்த அறிவிப்பினையடுத்தே மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி வாய்ப்பு அதிகரித்தாக நம்பப்படும் நிலையில் நேற்று வெளிநாட்டு ஊடகமொன்றிற்கு மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டார்.

''புலிகளுடன் பேச்சு நடத்தத் தயாராகவே இருக்கின்றேன் பிரபாகரனை சந்திப்பதற்கும் நான் ஆவலாக இருக்கிறேன்'' என்று தேர்தலில் வென்ற பின்னரும் கூறினார் மஹிந்த ராஜபக்ஷ. (ஐ-க)

# வருகின்ற ஜனாதிபதிக்கு போகின்றவர் வாழ்த்து!

கொழும்பு,நவ.19

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்ததையடுத்து அவருடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

நீண்ட இடைவெளிக்குப்பின்னர் இருவரும் தொலைபேசியூடாக மனம்விட்டு உரையாடிக் கொண்டனர் என இருவருக்கும் நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

பதவியிலிருந்து விடைபெற முன்னர் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு பிரியாவிடை விருந்துபசார வைபவமொன்றையும் மஹிந்த ராஜபக்ஷ ஏற்பாடு செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

# அக்கரைப்பற்றில் பள்ளிவாசல் மீது குண்டுவீச்சு; நான்கு பேர் மரணம்!

## 25 இற்கும் அதிகமானோர் படுகாயம்

ஆலையடிவேம்பு,நவ.19

அக்கரைப்பற்று பெரிய ஜும்மாப் பள்ளிவாசலில் நேற்று விடிகாலையில் சுபஹ் தொழுகையில் ஈடுபட்டிருந்தோர் மீது இனந்தெரியாதோர் நடத்திய கைக்குண்டு வீச்சில் நால்வர் கொல்லப்பட்டனர். 25 பேர் வரை படுகாயமடைந்தனர். அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களை அவசரமாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தக் குண்டுத் தாக்குதலினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே பள்ளிவாசலில் மக்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்த சமயம் அவர்களை நோக்கி இரு குண்டுகளை வீசி உள்ளனர்.

எம். அலியார் அபுபக்கர் (வயது - 57), முஹம்மது முஸ்தபா (வயது - 50), எம். அபுபக்கர் (வயது - 70), எம். இப்ராஹிம் (ஆசிரியர், வயது - 46) ஆகிய நால்வருமே கொல்லப்பட்டுள்ளனர்.

காயமடைந்த 25 பேர் கல்முனை, எழுவெட்டுவான், அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எழுவெட்டுவான் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களில் பலரின் நிலைமை மோசமாக இருப்பதால் அவர்களைக் கொழும்பு, கண்டி வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் லங்கா திலக்க ஜயசிங்க தெரிவித்தார்.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அங்கு பதற்றம் ஏற்பட்டிருப்பதால் அப்பகுதியில் இராணுவத்தினரும் அதிரடிப்படையினரும் கூட்டாக நேற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

குண்டு வீச்சுச் சம்பவத்தின் சூத்திரதாரிகளை அறியும்பொருட்டு விசேட பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக அக்கரைப்பற்று பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.கே. சூரியாராச்சி தெரிவித்தார்.

இக்குண்டு வீச்சால் ஏற்பட்ட பதற்றத்தின் எதிரொலியாக பெரிய பள்ளிவாசல் பகுதியைச் சூழவுள்ள பிரதேசத்தில் வாழ்ந்துவந்த தமிழ் குடும்பங்கள் நேற்றுக் காலை 7.30 மணியளவில் முக்கியமான பொருள்களுடன் தங்கள் குடியிருப்புகளை விட்டு,விட்டு இடம் பெயர்ந்து தமிழர்கள் அதிகமாக வாழும் ஏனைய பகுதிகளிலுள்ள உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆழிப் பேரலையின்போது சின்னமுகத்துவாரப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து கடந்த பத்து மாதங்களாக கிறிஸ்தவ இளைஞர் அமைப்பின் கட்டடத்தில் தங்கியிருந்த 32 குடும்பங்களும் அந்த இடத்தைக் காலி செய்துவிட்டு வேறு இடங்களுக்குச் சென்றன.

இடம் பெயர்ந்துள்ள 350 குடும்பங்களுக்கும் பாதுகாப்பும், உணவும் வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு பல பொதுஅமைப்புகள் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரைக் கோரியுள்ளன. (ஐ-க)

# நிறைவேற்று அதிகாரமுடைய 5ஆவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



| | | |
|---|---|---|
| ★ பிறந்தது | : | 1945 நவம்பர் மாதம் 18 ஆம் திகதி வீரகெட்டியவில். |
| ★ பாடசாலை | : | காலி றிச்மன்ட் வித்தியாலயம், நாலந்தா, தேர்ஸ்டன் வித்தியாலயங்கள் |
| ★ தொழிற்தகைமை | : | சட்டத்தரணி (சட்டக்கல்லூரி) |
| ★ நாடாளுமன்றப் பிரவேசம் | : | 1970 பெலி அத்த தேர்தல் தொகுதி (வயது 24) |
| ★ வகித்துள்ள அமைச்சர் பதவிகள் | : | தொழில் அமைச்சர் (1994-1996)<br>மீனவத்துறைமுக அமைச்சர் (1997-2001)<br>நெடுஞ்சாலைகள் அமைச்சர் (2004-2005)<br>எதிர்க்கட்சித் தலைவர் (2001-2004) |

★ செயற்பாடுகள் :

தொழிற்பயிற்சி அதிகாரசபையை நிறுவியமை,
மீனவர்களுக்கான வீட்டுத்திட்டத்தை அறிமுகப்படுத்தியமை.
கடற்கரை பாதுகாப்பு செயற்றிட்டத்தை மேற்கொண்டமை
தொழிலாளர்கள் சுகாதார நலன்களைப் பெறும் உரிமையைப் பெற்றுக் கொடுத்தவர்

★ குடும்பப் பின்னணி :

| | |
|---|---|
| தந்தை | : டி.ஏ.ராஜபக்ஷ (சுதந்திரக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்) |
| தாய் | : தந்தினா சமரசிங்க |
| சகோதரன் | : சமல் ராஜபக்ஷ (பெருந்தோட்டப்பிரதி அமைச்சர்) |
| மனைவி | : சிரந்தி ராஜபக்ஷ (முன்னாள் இலங்கை அழகுராணி) |
| மூத்தமகன் | : நாமல் ராஜபக்ஷ |
| 2ஆவது மகன் | : யோஷித ராஜபக்ஷ |
| 3ஆவது மகன் | : றோஹித ராஜபக்ஷ |

மூன்று பிள்ளைகளும் கல்கிசை சென்.தோமஸ் கல்லூரியில் (மஹிந்த ராஜபக்ஷ வுக்கு இளமையில் அனுமதி மறுக்கப்பட்ட கல்லூரி) கல்வி பயில்கின்றனர்.

# தேர்தல் வன்செயல் குறித்து எந்த முறைப்பாடும் இல்லை

## யாழ்.உதவி தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

நேற்றுமுன்தினம் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ்.மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகள் எவையும் இடம் பெற்றதாக இதுவரை பதிவு செய்யப்படவில்லை என்று யாழ்.மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் வி.குகநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற சமயம் வன்முறைகள் எவையும் இடம்பெற்றனவா என்று கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலன்று யாழ்.மாவட்டத்தில் சிறு சிறு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றபோதிலும் அவை தேர்தல் வன்முறைகள் என்று இதுவரை பதிவு செய்யப்படவில்லை.

அத்துடன் வாக்கு எண்ணும் நிலையங்களில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் சார்பில் நியமிக்கப்பட்டிருந்த முகவர்களும் யாழ். மாவட்டத்தில் மீள் வாக்களிப்பு எதுவும் தேவை இல்லை என்று கூறி திருப்தியுடன் வெளியேறியுள்ளனர்.

எனவே, யாழ். மாவட்டத்தில் எந்த வித அசம்பாவிதங்களும் மோசடிகளும் மற்ற நீதியான, நியாயமான தேர்தல் நடைபெற்றுள்ளது என்று கூறினார். (எ-13)



உதயன்
361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தென்னிலங்கை முடிவு தரும் பாடம்

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டன. இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கல், சமஷ்டி முறையில் தீர்வு, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை உட்படப் பல விடயங்கள் குறித்து விட்ட இடத்திலிருந்து அமைதிப் பேச்சுகளைத் தொடருதல் ..... இப்படிப் பல விவகாரங்களைப் பட்டும்படாமலும் கூறிவந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நிராகரித்துவிட்டது தென்னிலங்கைச் சிங்களம்.

சமாதானத்துக்கும் இன இணக்கப்பாட்டுக்கும் விரோதமான சிங்கள, பௌத்த பேரினவாதச் சக்திகளின் பக்கபலத்தோடு களத்தில் நின்ற மஹிந்த ராஜபக்ஷவை தென்னிலங்கை தெரிவுசெய்து முன்நிறுத்தியிருக்கிறது.

இனவாதமும், மதவாதமும், பழமைவாத கம்யூனிசமும் என்று குளறுபடிக் கருத்தியலில் புதைந்து கிடக்கும் ஜே.வி.பியின் ஆதரவில் தங்கி, அதன் மூலம் தம்மை ஜனாதிபதியாக்கிக் கொண்டிருக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ. பேரினவாதப் போக்கும், ஆதிக்க வலுவுமுடைய ஜே.வி.பியின் தோளில் ஏறி ஜனாதிபதிப் பதவிக் கதிரையை எட்டிப் பிடித்திருக்கின்றார் அவர்.

தமிழர் தாயகம் தனது சம்பந்தமோ, தலையீடோயின்றி, சிங்களத்தின் தலைமையை, தென்னிலங்கை மக்களே தெரிவுசெய்வதற்கு வாய்ப்பளித்ததால், அந்தத் தேசத்தின் உண்மை முகம் - கொடூரம் - எது என்பதை சர்வதேசம் மீண்டும் ஒரு தடவை அடையாளம் காண்பதற்கு வழியேற்பட்டிருக்கின்றது.

சிங்களத்தின் நிறைவேற்று அதிகாரத் தலைவரைத் தெரிவு செய்வதற்கு நடந்த இந்தத் தேர்தலின் முடிவு நமக்குத் தந்திருக்கும் பாடம் என்ன?

* *இலங்கைத் தீவில் தமிழருக்கு என்று தனியான பூர்விகத் தாயகம் இல்லை.*
* தமிழர் ஒரு தேசிய இனம் என்று உரிமை கோரமுடியாது.
* தமிழருக்கு சுயநிர்ணய உரிமை ஏதும் கிடையாது.
* போரழிவுகளினாலும், ஆழிப்பேரலையின் பேரழிவுகளினாலும் பாதிப்புற்று அவலப்படும் தமிழர்களின் அவசர, அவசிய மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்வதற்காகக் கோரப்படும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசவே கூடாது.
* *சமஷ்டித் தீர்வு என்ற பேச்சே இல்லை. எந்தத் தீர்வும் இலங்கை தேசத்தின் ஒற்றையாட்சி முறைக்குள்ளேயே காணப்பட வேண்டும்.*

-இப்படி எல்லாம் எழுத்தில் எழுதிக்கொடுத்து, ஒப்பந்தம் செய்து, அதையே தமது தேர்தல் பிரசாரமாக முன்வைத்த மஹிந்த ராஜபக்ஷவின் பேரினவாதப் போக்கை இந்தத் தேர்தலில் அங்கீகரித்து, தமது தீர்ப்பாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் தென்னிலங்கைச் சிங்களவர்கள்.

தமிழர் தாயகத்துக்கு வெளியே வசிக்கும் சிறுபான்மை இனத்தவரின் - தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் போன்றோரின் - ஆதரவே ரணிலுக்குக் கிட்டியிருக்கின்றது. பெரும்பான்மைச் சிங்களம், ஒரேயடியாக பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் பின்னால் அணிதிரண்டு தன்னை ஒரு நிலைப்படுத்தியிருக்கின்றது. அது கூறும் செய்தி என்ன?

பௌத்த, சிங்களப் பேரினவாத ஆதிக்க வெறிக்குள் புதைந்து கிடக்கும் சிங்கள அரசியல் அமைப்புகளும், சிங்கள மக்களும், சிங்கள அரசியல் முறைமையையும் தமிழ்த் தேச மக்களின் நியாயமான அபிலாஷைகளையும் ஒருபோதும் புரிந்துகொள்ளப்போவதில்லை. தமிழர் தரப்பின் மூலாதாரக் கொள்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படை விடயங்களை ஒருபோதும் அவை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு, அவற்றை ஏற்றுக்கொள்ளும் பக்குவமோ, பெருந்தன்மையோ, நியாயப் போக்கோ, மதிநுட்பமோ தென்னிலங்கைச் சிங்கள மக்களிடமும் சரி, அவர்கள் தெரிவுசெய்யும் அரசியல் தலைமைகளிடமும் சரி கிடையாது என்பதுதான் பேரினவாதச் சக்திகளை அதிகாரப் பீடத்துக்கு ஏற்றிய சிங்கள மக்களின் உள்ளக்கிடக்கையாக இத்தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தத் தீவின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் இனத்துக்கு நியாயமான - நீதியான - நிரந்தரத் தீர்வைத் தருவது இன்றியமையாதது என்பதைக் கூட ஏற்றுக்கொள்ளாத ஒரு தலைமையைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் சிங்களத்தின் உள்ளார்ந்த எண்ணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது; பேரினவாதம் வெளிப்படையாகப் பிரகாசித்து வெளிப்பட்டிருக்கின்றது.

நியாயத்தை உணர்ந்து செயற்படக்கூடிய ஒரு தலைமையைத் தெரிவுசெய்து, முன்நிறுத்த மறுத்துவரும் சிங்களத்தின் இந்த அடிப்படைச் சிந்தனைப் போக்கை சர்வதேச சமூகம் சரிவர எடை போடவேண்டும்.

அத்தகைய சிங்களத்தோடு உடன்பட்டு, இணக்கப்பாட்டுக்கு வந்து, அமைதித் தீர்வுகாணுமாறு - சாத்தியப்படாத ஒரு விவகாரத்தை - இனிமேலும் தமிழர் தரப்பு மீது வல்வந்தமாகத் திணிக்கும் தனது போக்கை சர்வதேச சமூகம் கைவிடவேண்டும். அதற்கான படிப்பினையை, வழமைபோல பேரினவாதப் போக்கை நிலை நிறுத்தும் தென்னிலங்கைச் சிங்களத்தின் இந்தத் தேர்தல் முடிவு சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தியிருக்கும் என நம்பலாம்.

'நச்சுநீர்' என்பது வழக்கத்தில் உள்ள சொல்லே தவிர

# குடாக்கடல் நீர் நஞ்சாகிவிடவில்லை; கடல்மீன் உண்பதால் ஆபத்துமில்லை!

## தவறான அபிப்பிராயம் என மீனவர் சங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம்,நவ.19

குடாக்கடல் நீர் நச்சுத்தன்மையாகியுள்ளதென்றும், அதனால் கடல் மீன்களை உணவாக உண்ணக்கூடாது என்றும் குடாநாட்டில் தவறான அபிப்பிராயம் பரவியுள்ளது. இதில் எந்தவித உண்மையுமில்லை.

- இவ்வாறு பாசையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளதாவது:-

குடாக்கடலில் ஒருவகை நச்சுநீர் பரவியுள்ளதாகத் தவறான அப்பிராயம் பொதுமக்கள் மத்தியில் பரவியுள்ளது. இதுமுற்றிலும் தவறான ஓர் அபிப்பிராயம் ஆகும்.

இந்த நீர்ப்பொருளின் பாதிப்பு யாழ். பரவைக்கடல் பகுதியில் தலைமுறை தலைமுறையாக - காலம்காலமாக - கடற்றொழிலாளருக்கு ஏற்பட்டேவருகிறது. இந்தப் பாதிப்பை ஏற்படுத்தும் நீர்த்தன்மையான பொருள் கண்களுக்குப் புலப்படுவதில்லை என்ற ஒரே காரணத்தினாலேயே நமது முன்னோர்கள் அதனை நச்சுநீர் அல்லது சுணைநீர் என்ற பெயரால் குறிப்பிட்டனர். அப்பெயரே இன்றுவரை வழக்கத்தில் உள்ளதே தவிர அது நஞ்சல்ல.

கடலில் காணப்படும் காக்காசொறி, அப்பச்சொறி, குளோவை, தடக்கை எனக் குறிப்பிடப்படும் உயிரினங்களும், பாசி முளைச்சான் என மீனவர்களால் அடையாளப்படுத்தப்படும் தாவரவகைகளும் மனித உடலில் பட்டால் சில மணி நேரம் அரிப்பை ஏற்படுத்துவன. ஆனால், சுணைநீர் எனக் கூறப்படும் சம்பந்தப்பட்ட நீர்த்தன்மையான பொருள் உடலில் பட்டால் கடுமையான வேதனை இரண்டு மூன்று நாள்களுக்குக் கூட நீடிக்கும்.

கடலுக்குள் இறங்கி இழுவை வலை மூலம் இறால் பிடிக்கும் மீனவர்களே இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

காலம் காலமாக இப்பாதிப்பு இருந்து வருகின்றபோதும் இதுகுறித்து ஆராய்ந்து, தடுப்புமுறை மருத்துவ ஆலோசனை போன்றவற்றைக் கண்டுபிடித்துக்கூற நிபுணர்களோ, அதிகாரிகளோ முன்வரவில்லை.

இந்த நிலையில், மீனவர்களில் சிலர் நான்கு அல்லது ஐந்து காற்சட்டைகளை ஒன்றன்மீது ஒன்றாக அணிந்து பாதுகாத்துக்கொள்ளும் பரிதாபநிலையில் உள்ளனர். ஆனால், வெளிநாடுகளில் கடற்றொழிலாளர்கள் இறப்பர் உடைகளை அணிந்து இத்தகைய பாதிப்புகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். இதனாலேயே, இது தொடர்பான நிவாரண ஆய்வுகளின் முக்கியத்துவத்தை முன்னிறுத்த கடற்றொழில் திணைக்களத்திடம் எமது சங்கம் கோரியிருந்தது.

உண்மை நிலை இதுவே தவிர கடல் நீர் நஞ்சாகவுமில்லை. அந்தக் கடலில் பிடிக்கப்படும் மீன்களை உண்பதால் பாதிப்பு ஏற்படப் போவதுமில்லை.

- இவ்வாறு மீனவர் சங்கம் விளக்கமளித்துள்ளது. (ஒ)

# கள்ள வாக்கைத் தடுத்தவருக்கு கொலை மிரட்டல் என முறைப்பாடு

வலி.வடக்கு,நவ.19

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பன்று கள்ளவாக்குப் போடவந்த கும்பலை வாக்களிப்பு நிலையத்தில் கடமையிலிருந்த உத்தியோகத்தரிடம் காட்டிக் கொடுத்த பொதுமகன் ஒருவர் நேற்றுக் காலை கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளானார். இது தொடர்பாக அவர் காரைநகர் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்துள்ளார். காரைநகர் வலந்தலைப் பகுதியைச் சேர்ந்த பாபு என்பவரே இவ்வாறு கொலைப் பயமுறுத்தலுக்கு உள்ளானவராவார்.

ஜனாதிபதித் தேர்தல் தினமான நேற்று முன்தினம் வாக்களிப்பு நிலையத்திற்கு அவர் சென்றபோது அப்பிரதேசத்தைச் சேராதவர்கள் அடங்கிய கும்பல் ஒன்று வாக்களிக்க வந்ததாகவும் -

இது தொடர்பாக வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தரிடம் அவர் முறையிட்டு அக்கும்பலின் கள்ள வாக்குப் போடும் முயற்சியைத் தடுத்தார் என்றும் - கூறப்படுகிறது. நேற்று இவர் யாழ்ப்பாணம் வருவதற்காகபஸ்தரிப்புநிலையத்தில்நின்றபோது குறிப்பிட்ட கும்பலைச் சேர்ந்த ஒருவர் இவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்று கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக உரியவர் காரைநகர் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாட்டைச் செய்துள்ளார். (ஒ-86)

# சிறைக்கைதிகளில் 45 சதவீதமானவர்கள் விடுதலையான பின் தண்டனைபெற்றவர்கள்

## ஆய்வுகளின் முடிவு தரும் தகவல்

கொழும்பு,நவ.19

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் சுமார் 30 ஆயிரம் கைதிகள் உள்ளனர். அவர்களில் 45 சதவீதமானவர்கள் சிறைகளிலிருந்து விடுதலையாகிச் சென்று மீண்டும் குற்றச் செயல்களில் தண்டனைபெற்றுச் சிறைகளில் அடைக்கப்பட்டவர்களாவர் என்று சிறைக் கைதிகளிடையே தொண்டு நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வுகளின் முடிவில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவந்துள்ளதாவது:-

இளம் வயதினர் சிறைத்தண்டனை பெறும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. கைதிகளில் சுமார் 60 சதவீதமானவர்கள் இளம் வயதினர் ஆவர். அவர்களில் 50 சதவீதமானவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகித் தண்டனை பெற்றவர்களாவர்.

இளம் வயதுக் கைதிகளின் புனர்வாழ்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகள் சீராகச் செயற்படாதமை கைதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒரு காரணமாகும்.

இளம் வயதுக் குற்றவாளிகளுக்குப் புனர்வாழ்வளித்து சமூக வாழ்வில் அவர்களை ஈடுபடுத்துவது தொடர்பாக எட்டு நிறுவனங்கள் செயற்பட்டுவந்துள்ளன. அவற்றில் நான்கு நிறுவனங்கள் மட்டுமே தற்போது செயற்பட்டு வருகின்றன. அத்தோடு புனர்வாழ்வளிப்பது தொடர்பாகப் பயிற்றப்பட்ட அதிகாரிகளின் பற்றாக்குறை காரணமாகச் சிறுவர் நல்வாழ்வுத் திட்டங்கள் முற்றாகச் செயலிழந்துள்ளன.

குற்றச்செயல்களில் ஈடுபடும் சிறார்கள் இளவயதிலேயே முறையாக நல்வழிப்படுத்தப்படாமையே சிறைக்கைதிகள் அதிகரிக்கப் பிரதான காரணமாகும்.

- இவ்வாறு ஆய்வு முடிவில் தெரியவந்துள்ளது. (ஒ-206)

# கைலாசபதி சிந்தனைமலர்

யாழ்ப்பாணம்,நவ.19

மௌன தவமுனிவர் பொ.கைலாசபதியின் சிந்தனைகள் அடங்கிய நூலை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

கைலாசபதி நூற்றாண்டு விழாக்குழுவினர் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். 1994இல் யாழ். பல்லைக்கழகத்தினால் தட்டச்சுப் பிரதியாக்கப்பட்ட 'கைலாசபதி சிந்தனைகள்' என்ற தொகுப்பினையே நூலாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரியார் அளவெட்டி பொ.கைலாசபதியின் 43 ஆவது நினைவு தினம் இன்று நவம்பர் 19ஆம் திகதியாகும். (அ)

# இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு இந்தியாவிலிருந்து 2 ஆயிரம் பஸ்கள்

கொழும்பு,நவ.19

இலங்கைப் போக்குவரத்துச் சபை இந்தியாவிடமிருந்து 2 ஆயிரம் பஸ்களைக் கொள்வனவு செய்துள்ளது. இவற்றில் 19 பஸ்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த பஸ் முதலில் குறுகிய தூர சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுப் பின்னர் தற்போது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள நீண்டதூர சேவைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்தியாவில் உள்ள டாட்டா மற்றும் அசோக் லேலண்ட் நிறுவனங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ள இந்தப் பஸ்கள் அலுமினிய உடற் கோப்புகளைக் கொண்டுள்ளமையால் நீண்ட காலம் தாக்குப்பிடிக்கவல்லன எனக் கூறப்படுகிறது. (ஒ-206)

# இலங்கை-நெதர்லாந்து இடையே சுனாமி அபிவிருத்தி ஒப்பந்தம்

காரைதீவு,நவ.19

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கை மீனவர்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளுக்கு நெதர்லாந்து அரசாங்கம் 62 கோடி 55 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. ஆழிப்பேரலையால் சேதமாக்கப்பட்ட படகுகளை மீளப் புனர்நிர்மாணம் செய்ய இந்நிதி பயன் படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பான ஒப்பந்தம் கடந்த 24ஆம் திகதி இலங்கை - நெதர்லாந்து அரசுகளிடையே கைச்சாத்தானது.

நெதர்லாந்து வழங்கும் நிதியைக் கொண்டு முதற்கட்டமாக ஆழிப்பேரலையால் சேதமான 391 படகுகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதித்திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர்கள், மீனவர் அமைப்புகள், படகு நிர்மாண நிறுவனங்கள் ஆகியவை இந்த நிதி உதவியால் பயன்பெற உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## நாளை

கார்த்திகை 05
ஞாயிற்றுக்கிழமை
20.11.2005
திதி: சதுர்த்தி
முற்பகல் 08.34 வரை
நட்சத்திரம்: புனர்பூசம்
முழுவதும்
சுபநேரம்: 09.09- 10.39
ராகுகாலம்: 04.39- 06.09
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

**வஞ்சனையாலும் சூதினாலும் சமயத்துக்கு ஏற்ப பலவித கபடங்கள் செய்து ஜீவிப்பவன் நரியைப் போன்றான்.**

*- பாரதியார்.*

## நாயன்மார் கட்டு வீதியில் பாரிய குழி

நல்லூர்,நவ.19

நாயன்மார்கட்டு, பாரதி ஒழுங்கை, நல்லூர் வடக்கு விநாயகர் வீதிகளை இணைக்கும் வயல்வெளி ஒழுங்கையின் நடுப்பகுதியில் பாரியகுழி ஒன்று கடந்த நான்கு வருடங்களாக கவனிப்பாரின்றி காணப்படுகின்றது.

தற்போது பெய்த பெரும்மழையால் இக்குழியில் வெள்ளம் நிரம்பி வீதிப் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாகவும் - சுமார் 40 வருடங்களாக இந்த வீதியில் திருத்தவேலைகள் இடம்பெறவில்லை எனவும் - இவ்வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வதில் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாகக் கோப்பாய் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டபோதும், குறிப்பிட்ட வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறவில்லை எனவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

(3-111)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி சபாபதிப்பிள்ளை

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி சபாபதிப்பிள்ளை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*'கொட்டடி'*
*அளவெட்டி.*

(42934)(15-45-30)

தகவல்:
*திருமதி அ.நாகநாதர் (சகோதரி).*

### *சிதம்பரி சின்னத்தம்பி*

*(மாவிட்டபுரம்)*



மாவிட்டபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகக் கொண்ட சிதம்பரி சின்னத்தம்பி அவர்கள் நேற்று (18-11-2005) வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மா (சுந்தரம்) அவர்களின் அன்புக் கணவரும் செல்லத்துரை (இலங்கை), சரஸ்வதி (இலங்கை), சிற்றம்பலம் (லண்டன்), சிறிபாஸ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரவணமுத்து, பவளம், சிவபாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலாமன்ற வீதி,**
**"செல்வபவனம்"**
**மானிப்பாய் கிழக்கு,**
**மானிப்பாய்.**
021- 4591053

(42945)(15-45-30)

*தகவல்:*
**சி.செல்லத்துரை** *(மகன்).*

## நிதி ஒதுக்கீடு

நல்லூர்,நவ.19

புத்தகலட்டி, ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்திற்கு கணனி கொள்வனவுக்கென பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ரூபா 60 ஆயிரம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ்பிரேமச்சந்திரன் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளார்.

(3-111)

## பொதுப் பரீட்சை

தென்மராட்சி,நவ.19

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாவட்ட ரீதியிலான பொதுப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகி 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை கொத்தணி மூலாதாரப் பாடசாலைகளில் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(3-117)

## மகளிர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.19

மகளிர் விழிப்புணர்வுத் தலைமைத்துவக் கருத்தரங்கும் சமூக அபிவிருத்தி மன்ற அங்கத்துவ மாணவர்களுக்கு கடனடிப் படையில் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வும் இன்று காலை 9.30 மணியளவில் சமூக அபிவிருத்தி மன்றத்தில் நடைபெறவுள்ளன.

சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'மகளிர் விழிப் புணர்வு' என்னும் தலைப்பில் திருமதி ஜெபமணி ஜோசப்பும், 'மகளிர் தலைமைத்துவம்' என்னும் தலைப்பில் திருமதி சரஸ்வதி வித்தியானந்தனும் உரையாற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில் சமூக அபிவிருத்தி மன்ற ஸ்தாபகர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் ஞாபகார்த்தமாக மன்ற அங்கத்தவர்களுக்கு பயன்தரும் மரங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

இதற்கான இளைஞர் சேவை மன்றம் 12 தையல் இயந்திரங்களையும் மனித நேய அமைப்பு 4 தையல் இயந்திரங்களை சமூக அபிவிருத்தி மன்றத்தினரிடம் வழங்கியுள்ளன.

(3-203)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னர் இராசதுரை

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பொன்னர் இராசதுரை அவர்கள் நேற்று (18.11.2005) வெள்ளிக்கிழமை இறைபதம் சேர்ந்துவிட்டார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்போதைய வசிப்பிடமாகிய 66/2, சென் ஜேம்ஸ் வீதி, கொழும்பு - 15இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி சதா யோகேஸ்வரி (மகள்).**

*66/2, சென் .ஜேம்ஸ் வீதி,*
*கொழும்பு-15*

(48940)(22-15-45-30)

தொடர்பு: 0112526639

### திருமதி றோசலின் பிரான்சிஸ் இராஜநாயகம்
### (இளைப்பாறிய ஆசிரியை, மெய்கண்டான்)



இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட றோசலின் பிரான்சிஸ் இராஜநாயகம் அவர்கள் நேற்று (18.11.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசேஸ் வஸ்தியாம்பிள்ளை- மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை செல்லையா- எலிசபெத் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிரான்சிஸ் இராஜநாயகம் (கிராமசேவகர்) அவர்களின் அன்பு மனைவியும், யூட்டெனிற்றா ஹெக்ரர் அவர்களின் (கனடா) பாசமிகு தாயாரும், ஹெக்டர் யோசப் (கனடா) அவர்களின் மாமியாரும், காலஞ்சென்ற ஜெறோம் வஸ்தியாம்பிள்ளை, அடைக்கலராக்கினி றொபேட்கிளைவ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற றொபேட் கிளைவ், காலஞ்சென்ற பாபரா சூசைப்பிள்ளை, மரியநாயகம், ஜெயராஜா, காலஞ்சென்ற செல்வநாயகம், ஜெயராணி, அமுதநாயகம், அழகக்கோன், ஞானரட்ணம், அற்புதம், காலஞ்சென்ற சவுந்தரம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் அவரின் இல்லத்தில் (இளவாலையில்) இன்று (19.11.2005) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் திருப்பலிக்காக இளவாலை/புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின் நல்லடக்கத்திற்காக புனித அன்னாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A.C.வினோதராஜ்,
40/5 Temple Road,
Jaffna.

(42939)(21-19-45-30)

தகவல்:
**மைத்துனர்.**

# நினைவலைகள்


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## கந்தையா மயில்வாகனம்
*(முன்னாள் நகரபிதா, சாவகச்சேரி நகர சபை, சமாதான நீதவான்)*

**தோற்றம்** 04.05.1925 — **மறைவு** 14.11.2000

## ஆறாம் மாத நினைவஞ்சலி



## மயில்வாகனம் சடாச்சரலிங்கம்

**தோற்றம்**
18.03.1954

**மறைவு**
28.05.2005

அன்புக்கோர் அகல் விளக்காய்
ஊர்போற்ற அவனிதனில் வாழ்ந்த உத்தமரே – நாம்
உங்களையே நினைத்திருக்க நீங்கள் மட்டும் – எமை
மறந்து சென்றதேனோ?
எம் உயிர் உள்ள வரை உம்நினைவு எம்மோடு
நிலைத்திருக்கும் எந்நாளும்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கண்டுவில் லேன்,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(42867)

# தமிழர் பங்களிப்பின்மையால் ஜனாதிபதித் தேர்தல் தோல்வி

## 'பவ்ரல்' அமைப்பு கூறுகிறது

கொழும்பு,நவ.19

"இந்த நாட்டில் வாழும் தமிழ்மக்கள் குறிப்பிடத்தக்க வீதத்தில் ஜனாதிபதித் தேர்தலில் பங்குகொள்ளாமையால் முழுநாட்டின் வாக்காளர்கள் மூலம் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுவார் என்ற நிலையில் ஜனாதிபதித் தேர்தல் தோல்வி கண்டுள்ளது.

இதேவேளை -

வடக்கு - கிழக்கிற்கு வெளியே ஜனாதிபதித் தேர்தல் வன்செயலோ, குளறுபடிகளோ இன்றி நடந்துள்ளது.

- இவ்வாறு தெரிவித்துள்ளது சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடான 'பவ்ரல்' அமைப்பு.

அவ்வமைப்பு நேற்றுமுன்தினம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைக்காலங்கள் போல் அல்லாது; இந்த முறை ஜனாதிபதித் தேர்தல், வன் செயல்கள் குறைந்ததாகவே வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.

எனினும், வடக்கு - கிழக்கில் அறவே வாக்களித்தலில் மக்கள் பங்குபற்றாத சூழலிலும், வன்செயல்கள் பெரியளவில் நடைபெறாமலும், பல்வேறு தலையீடுகளுடனும் நடந்திருப்பது, இந்தத் தேர்தலை குறிப்பிடத்தக்களவு பாதித்திருக்கின்றது.

தேர்தலுக்கு முன்னர், தமிழர் இத்தேர்தலில் ஆர்வம் காட்டுவதற்கான நியாயம் இல்லை. எனினும், அவர்கள் விரும்பினால் தமது வாக்கைச் செலுத்தலாம் எனப் புலிகள் தெரிவித்திருந்தனர். அத்தோடு, புலிகள் சார்பு அமைப்புகளும் இத்தேர்தலில் பங்குகொள்ள வேண்டாம் எனவும் மக்களை அறிவுறுத்தியிருந்தன.

இத்தேர்தலில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பில் சந்தேகம் நிலவியது. அவர்கள் இத்தேர்தலில் ஆர்வம் காட்டவில்லை எனும் தமது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினர். தமிழர் இத்தேர்தலில் ஆர்வம் காட்டுவதற்கான நியாயம் இல்லை என்பதே புலிகளின் நிலைப்பாடாகும்.

இத் தேர்தலில் வன் செயல்களும் இடம்பெற்றன. யாழ்ப்பாணத்தில் மூன்று கிரனைட் தாக்குதல்கள் இடம்பெற்றன. தேர்தல் தினத்தில் மிகக்குறைந்தளவு மக்களே வெளியே வந்து வாக்களித்தனர். அப்பிரதேசத்தில் ஒரு வீதத்திற்கும் குறைவான வாக்கே செலுத்தப்பட்டிருந்தது.

கடைகள் மூடப்பட்டிருந்தன. மக்கள் வீட்டிலேயே இருந்தனர். புலிகளின் நிர்வாகப் பகுதியில் இருந்த மக்கள் வாக்களிக்கவே இல்லை.

கிழக்கில் மக்கள் வாக்களிப்பதை தடை செய்யும், பிரயத்தனங்கள் இடம்பெற்றன. கருணா குழுவினர் வாக்களிக்குமாறு அறிக்கை விடுத்திருந்தனர்.

தேர்தல் நிலையங்களில் ஏழு குண்டு வெடிப்புகள் இடம்பெற்றன. குண்டை தயாரித்துக்கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படும் இருவர் மரணமாயினர். வீதியில் டயர்கள் எரியூட்டப்பட்டன. புலிகளின் நிர்வாகப்பகுதியில் இருந்து பஸ்கள் சொல்லாது தடுக்கப்பட்டன.

தமிழ் வாக்காளர்கள் பகிஷ்கரிப்பாலும், தலையீட்டாலும் இத்தேர்தலில் பங்கேற்காமை, இந்த வாக்களார்கள் தமது வாக்குரிமையைச் செலுத்தாமை தொடர்பில் 'பவ்ரல்' ஆழ்ந்த கவனம் செலுத்துகிறது.

தெற்கில் இத் தேர்தல் சிறப்பாக நடத்தப்பட்டது. ஐ.தே.கட்சியினருக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கும் இடையில் கைகலப்பு இருந்தது தலையீடும் தெற்கில் இருந்தது என பவ்ரல் அறிகிறது.

இந் நாட்டின் தமிழ்மக்கள் குறிப்பிடத்தக்களவு வீதத்தில் இத்தேர்தலில் பங்கொள்ளாதது நாட்டின் பரந்தளவு வாக்கில் தெரிவாகும் ஜனாதிபதி என்பதில் இத்தேர்தல் தோல்வி கண்டுள்ளது வருத்தத்திற்குரியதாகும் என அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பெண் ஒருவர் வெட்டிக்கொலை

செங்கலடி, நவ.19

செங்கலடி பிரதேச செயலகப் பிரிவின் களுவன்கேணி உப - அஞ்சல் நிலைய அதிபர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலீஸார் தெரி விக்கின்றனர்.

களுவன்கேணி அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றிவந்த பெண் அஞ்சல் அதிபரான வீரபத்திரன் - கோமதி (வயது-40) என்பவரே இனந் தெரியாத நபர்களினால் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என தெரியவந்துள்ளது.

சம்பவதினம் அஞ்சல் அலுவலகத்தில் தனது கடமையை முடித்துவிட்டு முறக்கொட்டாஞ் சேனையிலுள்ள தனது வீட்டுக்கு இவர் சென்றுகொண்டிருக்கும் போதே கோறளாங்கேணி எனுமிடத்தில் வைத்து வழிமறித்த சிலர் இவரை வெட்டிக் கொலை செய்துள்ளனர் எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர். கொலையுண்ட அஞ்சல் அதிபரின் கழுத்து அறுக்கப்பட்டு முகம் குப்புறக்கிடந்தது.

சடலத்தின் அருகில் சாறம், கைக்குட்டை மற்றும் செருப்பு ஒரு சோடி கிடக்கக் காணப்பட்டன. சந்தேக நபர்கள் எனக் கருதப்படும் நால்வரை ஏறாவூர் பொலிஸார் தேடி வருகின்றனர். (க)

## தப்பி ஓட முயன்ற சமயத்தில்

# வெலிக்கடைச் சிறைச்சாலையில் பிரெஞ்சுக் கைதி மீது சூடு!

வெலிக்கடை,நவ.19

வெலிக்கடை சிறையிலிருந்து தப்ப முயன்றவர் எனக் கூறப்படும் பிரெஞ்சு நாட்டவரான கைதி ஒருவர் மீது சிறைச்சாலை அதிகாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். அதனால் அவர் காயமடைந்தார்.

கடந்தவாரம் இலங்கைக்கு வந்த இந்தப் பிரெஞ்சு நாட்டவர் பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் பாதுகாவலர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். பின்னர் இவர் மனநிலை பாதித்தவர் என அறிந்து இவரை அங்கொடை மனநோய் மருத்துவமனையில் சேர்த்துப் பின்னர் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றினர் அதிகாரிகள்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை இரவு சிறைச்சாலையின் சுவரின் மீது ஏறி இந்நபர் தப்பியோட முற்பட்டார் எனவும்,

அவரைப் பிடிக்கச் சென்ற அதிகாரிகளை அவர் தாக்கினார் எனவும்- கூறப்படுகின்றது.

இவர் சரணடைய மறுத்து முரண்டுபிடித்தமையினால் வேறு வழியின்றித் தாம் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

# பொலீஸ் ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிகிறது

கொழும்பு, நவ.19

தேசிய பொலீஸ் ஆணைக் குழுவின் ஆயுட்காலம் எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. ஏழு உறுப்பினர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரியவை தலைவராகக் கொண்ட இந்த ஆணைக் குழுவில் பேராசிரியர் எம். ரி.ஏ. புர்கான், பேராசிரியர் வண. துன்முல்லே சீலகந்த தேரர், கலாநிதி எஸ்.ஜே. ஸ்ரீபன், அசோக்க குணசேகர, எஸ்.பி. பந்துசேன, எம். கோபாலசுந்தரம் ஆகியோர் இதர உறுப்பினர்களாவர்.

புதிய ஜனாதிபதியொருவர் நியமனம் பெற்ற பின்னர் ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்களெனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# பிரத்தியேக அ.அட்டை வழங்கும் படையினரின் திட்டத்துக்கு எதிர்ப்பு

நல்லூர்,நவ.19

நெடுந்தீவில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு பிரத்தியேக அடையாள அட்டை வழங்கும் கடற்படையினரின் திட்டத்துக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்றொழிலாளர்களுக்கு நெடுந்தீவில் முகாமிட்டிருக்கும் கடற்படையினர் பிரத்தியேக அடையாள அட்டைகளை வழங்கத் திட்டமிட்டனர். இது தொடர்பாக மீனவர் சங்க அலுவலத்தில் கடற்றொழிலாளர்களுடன் கடந்த 15ஆம் திகதி கடற்படையினர் கலந்துரையாடல் நடத்தினர்.

அந்தக்கலந்துரையாடலில் தமக்குத் தனியான அடையாள அட்டை விநியோகிக்கப்படுவதைத் தாங்கள் முற்றுமுழுதாக எதிர்ப்பதாக நெடுந்தீவுக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். (ஒ-111)




# மரக்கிளை வெட்டுவதாகக் கூறி பணம் பறிப்போர் நடமாட்டம்

நல்லூர்,நவ.19

மரக்கிளைவெட்டுவோர் என்று கூறிக்கொண்டு வீடுகளுக்கு வருபவர்கள் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

அடர்த்தியாக வளர்ந்த மரங்களின் கிளைகளை மழைகாலத்தில் வெட்டிப் பராமரிப்பது வழக்கம். இதனைப்பயன்படுத்தி 'மரக்கிளைகளை வெட்டித் தருகிறோம்' என்று கூறிச்சிலர் வீட்டு உரிமையாளர்களை அணுகுகின்றனராம். இதற்குக் கூலியாகத் தருவதைத் தாருங்கள் என்று அவர்கள் முதலில் கூறுகின்றனர் என்றும்-

மரக்கிளைகளை வெட்டி முடித்தபின்னர். அதிக தொகையைக் கூலியாகக் கேட்டுத் தகராறு செய்கின்றனர் என்றும்-

அவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

சில வேளைகளில் வீட்டு உரிமையாளர்கள் தடுப்பதையும் உதாசீனப்படுத்திவிட்டு மரங்களில் ஏறிக்கிளைகளை வெட்டுகிறார்கள் என்றும்-

பின்னர் கேட்ட தொகையைக் கூலியாகத் தரும்படி வற்புறுத்துகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றர். (ஒ-111)

# வலி.மேற்கு பாடசாலை மாணவரின் சிறுவர், முதியோர் தினப்போட்டி முடிவுகள்

வலி.மேற்கு, நவ.19

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தால் அந்தப் பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சிறுவர், முதியோர், வலுவிழந்தோர் தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**சிறுவர்தினம் - கவிதை**

**பிரிவு 1 :-** உ.சோபனா (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.), சி.துளசிகா (சங்கானை சிவப்பிரகாச வித்தி.), இ.மேருசா (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.)

**பிரிவு 2 :-** உ.சுகிர்தா (விக்ரோறியாக் கல்லூரி), கு.தனிஸியா (பண்ணாகம்) மெய்கண்டான் வித்தி.), கா.தர்மசுகி (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.)

**பிரிவு 3 :-** நா.அரங்கா (சங்கானை சிவப்பிரகாச வித்தி.), ச.துளசி (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.), பொ.நிஷாந்தினி (வட்டு. இந்துக்கல்லூரி)

**கட்டுரை**

**பிரிவு 1:-** இ.கோபிகா (சங்கானை சிவப்பிரகாசவித்தி.), க.சர்மிளா (வட்டு.மத்திய கல்லூரி), ப.கவிதா (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.).

**பிரிவு 2:-** கு.சொரூபிகா (விக்ரோறியா கல்லூரி), ச.கார்த்திகா (வட்டு.மத்திய கல்லூரி), சி.நீதிபதி (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.)

**பிரிவு 3:-** ச.பிரதீபா (விக்ரோறியாக் கல்லூரி), தெ.விஜிதா (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.), ச.அனுசியா (வட்டு.இந்துக்கல்லூரி)

**முதியோர் தினம்**
**கட்டுரை**

**பிரிவு 1:-** ச.லாவணீயா (தொல்.விக்கேஸ்வரா வித்தி.), நா.தனுசா (மூளாய் சைவப் பிரகாச வித்தி.), இ.கிருஷ்ணவேணி (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.).

**பிரிவு 2:-** மோ.மைதிலி (வட்டு.மத்திய கல்லூரி), கு.தனுஜா (சங்கானை சிவப்பிரகாச வித்தி.), சி.சர்மிளா (விக்ரோறியாக் கல்லூரி).

**பிரிவு 3:-** து.உதயகௌரி (விக்ரோறியாக் கல்லூரி), செ.கேதீஸ்வரி (வட்டு.மத்திய கல்லூரி), வே.தர்சினி (வட்டு. இந்துக் கல்லூரி)

**கவிதை**

**பிரிவு 1:-** ஜெ.சங்கீதா (சங்கானை சிவப் பிரகாச வித்தி.), ஜெ.கௌசல்யா (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.), தே.சதீஸன் (வட்டு.இந்துக் கல்லூரி).

**பிரிவு 2:-** இ.சயனுதா (வட்டு.மத்திய கல்லூரி), சி.முகுந்தினி (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.), செ.கஜிதா (சங்கானை சிவப்பிகாச வித்தி.)

**பிரிவு 3:-** அ.நர்மதா (சங்கானை சிவப் பிரகாச வித்தி.), க.வஜிதா (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.), ஐ.றபீறீதா (விக்ரோறியா கல்லூரி)

**ஊனமுற்றோர் தினம்**
**கட்டுரை**

**பிரிவு 1:-** ஜீ.மாதுரி (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.) ம.மயூரா (வட்டு.மத்திய கல்லூரி), சி.கோபிநாத் (வட்டு.மத்திய கல்லூரி.)

**பிரிவு 2:-** கு.கணறூபன் (விக்ரோறியாக் கல்லூரி), சி.சுமிதா (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.),கு.கிரிசாந்தி (வட்டு.மத்திய கல்லூரி).

**பிரிவு 3:-** ப.சுமிதா (பண்ணாகம் மெய் கண்டான் வித்தி.), கு.சயந்தா (விக்ரோறியாக் கல்லூரி), தே.தர்சினி (சங்கானை சிவப் பிரகாச வித்தி.).

**கவிதை**

**பிரிவு 1:-** ஜெ.நிரோஜன் (அராலி சரஸ்வதி வித்தி.), செ.சசிகலா (சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தி.), ஜெ.நாதநந்தினி (தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.).

**பிரிவு 2:-** சி.விஜயலதா (விக்ரோறியாக் கல்லூரி), ந.மதனிகா (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.), க.யோசிதா (சங்கானை சிவப்பிரகாச வித்தி.).

**பிரிவு 3:-** சி.வாசுகி (விக்ரோறியாக் கல்லூரி), இ.நிரோஜா (சங்கானை சிவப்பிரகாச வித்தி.), இ.பாலரஞ்சினி (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.). (த-203-175)

# மாணவர்களுக்கு சிவதீட்சை

கோப்பாய்,நவ.19

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு சிவதீட்சை வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

சிவதீட்சையை புத்தூர் சிவன் கோயில் பிரதம குருவான கைலாசநாதக் குருக்கள் வழங்கினார்.

இந்த நிகழ்வில் முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் சிவதீட்சையைப் பெற்றனர். மேலும் சிவதீட்சையின் அவசியம் குறித்து சைவசமய ஆர்வலர் இ.நாகேந்திரராஜா சிறப்புச் சொற்பொழிவாற்றினார். (ஒ-72)

# நீர்வேலி மேற்கில் சட்டவிரோத மின்பாவனை

கோப்பாய்,நவ.19

நீர்வேலி மேற்குப் பகுதியில் சட்டவிரோத மின் பாவனை அதிகரித்துள்ளதாகவும் - இதனால் அப்பகுதியில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதாகவும் - பொதுமக்கள் தெரிவித்தனர்.

சட்டவிரோத மின் இணைப்பு மேற்கொள் ளும் சமயத்தில் குறுஞ்சுற்று ஏற்பட்டு மின்கம்பிகள் எரிந்து அறுந்து விழும் சம்பவங்களும் நிகழ்கின்றன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-72)

## காரைநகரில் புற்றுநோய் சோதனை

நவாலி, நவ.19

காரைநகரில் கடந்தவாரம் இடம்பெற்ற வாய்ப்புற்றுநோய் இலவச மருத்துவ சிகிச்சையில் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு பரிசோதனை செய்துகொண்டனர்.

இப்பரிசோதனையின்போது இருவருக்கு இந்நோய் இருப்பதாக சந்தேகித்து மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர். (ஓ-100)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யோண்பிரான்சீஸ் - ஜோதினி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரன் டண்ஸ்ரன் ஜெயக்குமார் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையை இட்டு அவர் சித்தி பெற உழைத்த அதிபர், ஆசிரியர்களுக்கு சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க அறிவொளிர் ஒன்றியத்திற்கும் நன்றி தெரிவிப்பதோடு, இன்று 19.11.2005இல் தனது பத்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் இவ் வேளை யில் சகல கலையும் பெற்று கல்வியில் உயர்ச்சிபெற சில்லையூர் கதிரைச் செல்வியை வேண்டி நிற்கும் ...

சில்லாலை. (42902) - குடும்பத்தினர்.

## SRI LANKA RED CROSS SOCIETY JAFFNA DISTRICT

in conjunction with the Australian Red Cross

### VACANCY FOR YOUTH/ VOLUNTEER MANAGEMENT OFFICER

We are seeking for a motivated person with qualifications and demonstrated experience in the area of volunteer management to work with the Organisational Development Delegate of the Australian Red and the Branch Executive Officer of the Sri Lanka Red Cross, Jaffna Branch. The successful candidate will set up volunteer management system and regularly travel to Red Cross District Sub Branches and units to assist them in volunteer management.

**Duties applicable**

I. Work towards the achievement of Sri Lanka Red Cross (SLRCS) and Australian Red Cross (ARC) goals through effective relations and teamwork

2. Ensure understanding of roles, responsibilities, lateral relationships and accountabilities

3. Perform other work related duties and responsibilities as may be assigned by the Supervisor.

**Specific responsibilities and accountabilities**

1. Implement activities including trainings and networking in youth and volunteer component of Organisational Development plan and in according to the policies and procedures of volunteer management (VM).
2. Develop and implement a VM system at the Branch, District Sub- Branch and unit level.
3. Recruit youth volunteers, advisors, and set up the committee.
4. Develop and volunteer database at the branch.
5. Prepare and circulate report on volunteer activities to relevant bodies.
6. Be responsible for assuring sub branches and units regularly update their database and send to branch to forward to NHQ
7. Set up system to recruit, train, retain and recognise volunteers.
8. Set up specialised volunteer service (SVS) system.
9. Monitor and evaluate implementation of VM policy implementing at the Branch level
10. Ensure appropriate, consistent and fair treatment of all volunteers.
11. Develope, implement and maintain a SLRCS volunteers identification system.
12. Supervise and monitor activities of the volunteers.
13. Conduct quarterly review meetings with volunteers at sub branches
14. Actively participate in meetings with the VM coordinator at the NHQ

**Qualifications:**

- Degree or Diploma in Social Work or equivalent community focussed education.
- Minimum 5 years experience with working with similar work.
- Excellent English both spoken and written
- Experience as Red Cross volunteer is an asset.
- Very competitive salary will be offered to the successful applicant.

Applications should be sent under registered mail before 26th November 2005 to:

**Branch Executive Officer**

SriLanka Red Cross Society,
Jaffna Branch,
No.73, Kandy Road, Jaffna.

(C/46177)

## சைக்கிள் திருட்டு

வலி.தென்மேற்கு, நவ.19

பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து சில்லாலைக்கு செல்லும் வீதி ஓரத்தில் மாணவர் ஒருவரால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இவர் வீதி ஓரத்தில் தமது சைக்கிளை நிறுத்திப் பூட்டிவிட்டு பஸ் மூலம் பாடசாலைக்குச் சென்று வருவது வழக்கம் என்றும்-

சம்பவதினம் இவர் திரும்ப வந்து பார்த்தபோது தமது சைக்கிள் திருட்டு போனது அறிந்து அதிர்ச்சியடைந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ஓ-135)

## ஸ்கந்தவரோதயா பழைய மாணவர்சங்க கிளை நிர்வாகிகள்

வலிகாமம் தெற்கு, நவ.19

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழையமாணவர் சங்க கொழும்புக் கிளையின் புதிய நிர்வாக சபை அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற பழைய மாணவர் சங்க ஒன்றுகூடலின்போது கொழும்புக் கிளையின் தலைவராக கலாநிதி எஸ்.கதிர்காமநாதன் தெரிவுசெய்யப்பட்டார்.

சங்கத்தின் செயலாளராக ஆ.ரகுபதி பாலசிறீகரன், பொருளாளராக எஸ்.சுந்தரலிங்கம், பத்திராதிபராக இறைவன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக ஆண்டுதோறும் மேற்படி கிளையினர் கூடிய பங்களிப்பைச் செய்துவருகின்றனர். புதிய நிர்வாக சபை இவ்வாண்டு பல புதிய செயற்றிட்டங்களை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டது.

(ஓ-152)

## திருக்கேதீஸ்வரத்தில் சிவன் அருள் இல்லம்

யாழ்ப்பாணம், நவ.19

திருக்கேதீஸ்வரத்தில் உள்ள சிவன் அருள் இல்லம் தற்போது சேவைகளை முன்னெடுத்து வருகிறது.

இங்கிலாந்தில் வாழும் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ஜெயேந்திரன் நமசிவாயம் தலைமையில் உருவாக்கப்பட்ட திருக்கேதீஸ்வர ஆலயச் சுற்றாடலில் இயங்கிவரும் சிவன் அருள் இல்லம் ஆதரவற்ற சிறுவர்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்திச் செயற்பட்டு வருகின்றது.

ஆதரவற்ற சைவச்சிறுவர்களுக்கென சிறுவர் அருள் இல்லம் அமைக்கப்பட்டுள் ளது. மன்னார் மாவட்டத்தில் உள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட சிறுவர்களுக்கு உணவு, உடை, கல்வி வசதிகளை வழங்கி அவர்களைப் பாதுகாத்து வருகின்றது இவ் அருள் இல்லம்.

மேலும், பல வறுமைக்குட்பட்ட சைவச் சிறுவர்களை இல்லத்தில் சேர்த்து பராமரித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை இல்ல நிர்வாகிகள் மேற்கொண்டு வருகின்ற னர்.

பலகாலமாக இடம்பெயர்ந்து தற்போது தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ள திருக்கேதீஸ்வரம் கௌரி அம்பாள் பாடசாலையில் இச்சிறுவர்கள் கல்வியைத் தொடர வழிசெய்யப்பட் டுள்ளது.

(ஓ-152)

## விடுதி மேற்பார்வையாளர் (Hostel Warden)

கொழும்பிலும், மன்னாரிலும் உள்ள மாணவர் விடுதிகளில் தங்கியிருந்து மேற்பார்வையாளர்களாகப் பணியாற்றுவதற்கு அனுபவமுள்ள ஆண்கள் தேவை. ஆசிரியராகப் பதவி வகித்தவர்கள் விரும்பப்படுவர். நேர்முகப் பரீட்சைக்குப் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0712723456 (C/46247)(50)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும்

சபிண்டீகரண அழைப்பும்

அன்னை மடியில் 26 - 05 - 1922

முருகன் மடியில் 05 - 11 - 2005



அமரர்

### முருகேசு கனகரத்தினம் ஐயா

05.11.2005 அன்று முருகனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் முருகேசு கனகரத்தினம் ஐயா அவர்களின் 16ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரணமும் நாளை (20.11.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனை நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தவனம் கோயிலடி,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை. (47777) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவுநாள்

உதயம் 05 - 12 - 1932

அஸ்தமனம் 31 - 11 - 2004



### அமரர் ந. சிவபாதம் (புத்தொளி)

திதி:19.11.2005

தன் மிடுக்கோடு தமிழன் இங்கு என்றும் வாழ ஏற்ற வழிகளில் இறங்கி உழைத்த உறங்கா நெஞ்சன். நல்லாசிரியன் ,நல்வலு அதிபன், மாண்பணிபூக்கும் வாண்மை விருத்தி ஆசிரியர்கள் தேசுற ஈட்டும் சேவைக்கால வகுப்புகள் நடத்திய நாவல்லவனாய் நயமிகு இலக்கியப் படைப்பாளியாகப் பத்திரிகைத் துறை வழுத்தும் ஒருவனாய், தொழிற்சங்கவாதியாய், நவமிகு நூல்பல நல்லெழுத்தாளனாய் சிவபாதம் என்னும் தீரன் புத்தொளி ஒளிர்ந்தவன்! அவனே ஓய்ந்தவனாகக் கழிந்ததோர் ஆண்டுகாலம். எனினும் விண்ணிலும் எங்கள் கண்ணிலும் நெஞ்சிலும் வித்தக விளக்காய் புத்தொளி விளங்குவான்.

'யதுகிரி'
புளியங்கண்டுலேன்,
ஆனைக்கோட்டை. (42735)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## பொன்னுத்துரை – பூரணம்

திதி: சங்கடஹரசதுர்த்தி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08-04-1924 | 01-12-2004 |

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல்

22(8), பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.

(42917)

## 30 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



திருமதி
**சின்னத்தங்கச்சி சின்னத்தம்பி**

கடந்த 23-10-2005 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி சின்னத்தங்கச்சி சின்னத்தம்பி அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நாளை (20-11-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும்.

அத்தருணம் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

- குடும்பத்தினர்.

(42918)


# SAAMSTECH இன் ஆங்கிலம்

எழுத, வாசிக்க, கதைக்க, புரிந்துகொள்ள மூன்றே மாதத்தில் முழுமையான ஆங்கிலம்

• அடிப்படைக்கட்டமைப்புக்கள் மூலம் வசன உருவாக்க வேகம் • விருத்தியாக்க படிமுறைமூலம் பெரிய வசனங்கள் • ஒலிப்பயிற்சி மூலமான கிரகித்தல் • பழக்கப்படுத்தல் மூலம் சொல்வள விருத்தியாக்கம் • பிரயோகங்கள் மூலம் தொடர்ச்சியான கதைத்தல் • உரையாடல் மூலமான தேர்ச்சி

தினம் தினம் அமெரிக்கா மற்றும் லண்டனில் இருந்து தருவிக்கப்படும் ஒலிப்பயிற்சிகளுடன்................

இப்பயிற்சிமூலமாக சிறியவர்களால்கூட சில நாட்களிலேயே ஏராளமான வசனங்களை வேகமாக உருவாக்கிக் கதைக்க முடியும்

அனேகரின் விருப்பத்திற்கிணங்க **இரட்டைச் சலுகை**

1 இன்றும் நாளையும் பாடநெறிக்கு பதிவுசெய்வோருக்கு ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள், CD என்பன இலவசம்

2 ஆங்கிலத்துக்கு பதிவுசெய்வோருக்கு ரூபா 2500/- புத்தகங்கள், மற்றும் ரூபா 4000/- பெறுமதியான சிங்கள பாடநெறி இலவசம்

**இச் சலுகை இன்றும் நாளையும் மட்டும்**

ஒவ்வொரு பிரிவுக்கும் காலை, மாலை கிழமை மற்றும் சனி,ஞாயிறு வகுப்புக்கள் உண்டு. விரும்பிய வகுப்பில் பதிவுசெய்யலாம்
ஒவ்வொரு வகுப்பிலும் 30 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

SAAMSTECH
84 I, Hospital Road, Jaffna. Ph : 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505



அனைவருக்கும் புலமைப்பரிசில்

# COMPUTER EXPRESS
Institute of Information Technology

## புலமைப்பரிசில் திட்டம் - 2005

80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4 மாதம் | 7,000 | 1,400 |
| Honours Diploma in Computer Science | - 6 மாதம் | 9,000 | 1,800 |
| Diploma in Webpage Designing | - 4 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in Desktop Publishing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Hardware Engineering | - 3 மாதம் | 6,000 | 1,200 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 6,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 750 |

Advances Courses

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சான்றிதழ் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

December 03rd திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 19/11/2005
Batch II - 20/11/2005
Batch III - 25/11/2005
Batch IV - 26/11/2005

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-2228250, 0777 222422


## மீனவர் சங்க அலுவலகம் திறப்பு

நவாலி, நவ.19

நாவலி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கஅலுவலகம் முருகானந்தா சனசமூக நிலையத்திற்கு அருகிலுள்ள கட்டடத்தில் கடந்த 13ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

சங்கத்தலைவர் க.தர்மலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கடற்றொழில் பரிசோதகர் பி.ஜெயசீலன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு அலுவலகத்தை திறந்து வைத்தார்.

பின்னர் அவர் உரையாற்றுகையில்- நீண்டகாலமாக இயங்காதிருந்த இச்சங்கம் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. இச்சங்கத்தினுடாக முன்னர் கடலட்டை மற்றும் கடலுணவுகள்என்பனவும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. அதேபோன்று மீண்டும் தொழிலாளர் இதில் ஆர்வம் காட்ட வேண்டும்

கடற்றொழிலாளர்கள் மீனவர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் வயதான காலத்தில் மாதாந்தம் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளலாம் - என்று கூறினார். (ஒ100)

## சோமவார உற்சவம்

வட்டுக்கோட்டை கண்ணலிங் கேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் ஒவ்வொரு கார்த்திகைத் திங்களும் சோமவார உற்சவம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்ப மாகி அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம் பெறும் என்றும் -

திருவெம்பாவை உற்சவம் எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி காலை 5 மணிக்கு ஆரம்பமாகும் என் றும் -தொண்டர் சபையினர் தெரிவித் துள்ளனர்.

## சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு, நவ.18

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை நாவலடியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட இரண்டு சடலங்களில் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது குறித்துத் தெரியவருவதாவது:-

கடந்த திங்கட்கிழமை செங்கலடி கறுத்தப்பாலத்தில் வைத்து இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு, கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவரான களுவன்கேணி வாசியான செல்லையா சுரேஷ் (வயது-25) என்பவரின் சடலமே தற்போது அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

பதில் நீதிவான் வினோபா இந்திரன் முன்னிலையில், தமது மகனின் சடலத்தைத் தாயார் செல்லையா திரேஸா (வயது-50) அடையாளம் காட்டினர். (க)

## சனசமூக நிலையத்துக்கு நிதி உதவி

யாழ்.கிறின் பீல்ட் சனசமூக நிலையத்திற்கு உடற் பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவநேசன் பன்முகப்பட்ட வரவு, செலவு திட்ட நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

(ஒ-190)

Jayoda **ஜயோதா** ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7308314 முதல் 7312115 வரை சீட்டிழுப்பு இல. 186 திகதி 17-11-2005

வெற்றி எண்கள் **4 6 5 9 5 6** சுப்பர் எண் **20**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,15,69,800/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,05,69,800/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | - | 10,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 03 | 50,000/- | 1,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 32 | 5,000/- | 1,60,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 325 | 500/- | 1,62,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 3,240 | 50/- | 1,62,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 32,093 | 10/- | 3,20,930/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 04 | 5,000/- | 20,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 27 | 1,000/- | 27,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 326 | 100/- | 32,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 3,211 | 20/- | 64,220/- |
| | | மொத்தம் | 17,01,850/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | ·75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 2,304,450/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,16,59,850/-**
தொடர் இல. 6384070 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 21 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 7309212-2-01 |
| ஹம்பாந்தோட்டை | 7310455-1-82 |
| கேகாலை | 7310217-5-26 |
| கண்டி | 7309657-6-55 |
| இரத்தினபுரி | 7309491-3-90 |
| புத்தளம் | 7308395-9-02 |
| அம்பாறை | 7310815-5-36 |
| நுவரெலியா | 7310738-6-50 |

# கள்ள வாக்குப் போட முயன்றவர்கள் பதுளையில் சிக்கினர்

பதுளை தேர்தல் தொகுதியில் கள்ள வாக்குப் போட முனைந்த பெரும்பான்மை இனத்தவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

பதுளை மத்திய மகா வித்தியாலயத்திலும், கந்தகெதர வித்தியாலயத்திலும் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடிகளிலேயே இவ்விருவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

வாக்களிப்பு இறுதி நேரத்தில் - 3.45 மணியளவில் - அவசர அவசரமாக வாக்களிக்க இவர்கள் முனைந்தபோது இவர்கள் குறித்து சந்தேகம் எழுந்ததாகக் கூறப்படுகிறது.

இவர்களின் நடமாட்டத்தின் மீது சந்தேகம் கொண்ட பொலீஸார், இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது, இவ்விருவரும் கள்ள வாக்குப் போட முயன்றமை தெரிய வந்ததாம். சந்தேக நபர்கள் இருவரும் பதுளைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப் பட் டுள்ளனர்.

இதேவேளை - பதுளை தேர்தல் அலுவலகத்திற்குப் பின்புறமாக உள்ள பற்றைக்குள் ஜே.ஆர். ரக கைக்குண்டு ஒன்று நேற்று மாலை 6.15 மணியளவில் பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இக்கைக்குண்டு ஏற்கனவே அந்த இடத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக பதுளைப் பொலீஸார் தெரிவித்தனர். இக்கைக்குண்டை செயலிழக்கச் செய்ய தியத்தலாவை இராணுவக் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார் ஊவா மாகாண பிரதி பொலீஸ்மா அதிபர் ரி.ஜே.மிஸ்கீன். இது தொடர்பில் எவரும் கைதாகவில்லை. மேலதிகப் பாதுகாப்பு இப்பகுதியில் பலப்படுத்தப்பட்டுள்ளது.

**கலாலயா** பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

இடைநிறுத்தப்பட்டிருந்த புதிய வகுப்புகளுக்கான அனுமதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றன.

**மகளிருக்கான துரித 3 மாதகால பயிற்சிகள்**

- ☐ கேக் ஐஸிங்
- ☐ உணவு தயாரித்தல்
- ☐ பூவேலை
- ☐ கைவேலை
- ☐ கூந்தல் அலங்காரம்
- ☐ Fabric வர்ணமிடல்
- ☐ அடிப்படை Facial மற்றும் மணப்பெண் அலங்காரம்

இத்துடன் **6 மாதகால** தையல் பயிற்சிக்கும் அனுமதிகள் உண்டு.

♦ *மேலும் விவரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப.2.30 மணி வரை நேரில் அறிந்துகொள்ளலாம்.*

(சி-46246)

**UNIVAC** Software Engineering Park



சிங்கப்பூரில் உள்ள செரங்கூன் நகரில், யாழ் யுனிவெக் நிறுவனமும், சிங்கப்பூரில் உள்ள சிஸ்ரம் கொம்பியூட்டர் நிறுவனமும் இணைந்து கணனி மென்பொருள் வடிவமைப்பு, சிங்கப்பூரில் உயர் கல்வி, கணனிப்பயிற்சி, வேலைவாய்ப்பு தொடர்பான உடன்படிக்கை செய்யப்பட்டது

யுனிவெக் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் பா.சுரேஸ்குமார் அவர்களின் வேண்டுகோளின்படி சிஸ்ரம் கொம்பியூட்டா நிறுவனம் 200 இலங்கை மாணவர்களிற்கு **Software Development** பயிற்சி வழங்க முன்வந்துள்ளது. போட்டிப்பரீட்சை ஊடாக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு புலமைப்பரிசில் அடிப்படையில் இப் பயிற்சி வழங்கப்படும்.

இப் புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள் இலக்கம் 174, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள, யுனிவெக் நிறுவனத்தில் வழங்கப்படும்.

E-mail: Vb21suresh@gmail.com T.P: 077 6176476

**சிறப்புத்தன்மைக்காக...**
**அதிநவீன LAMiCO® தொழில்நுட்பத்தில்...**



4 - 6 சிலிக்கன் ரோலர் லெமினேட்டிங் இயந்திரம் புகைப்பட லெமினேட்டிங்குக்காக
ஏ4 ரூ. 19,000
ஏ3 ரூ. 29,000



மெட்டல் புக் பைண்டர்கள் சரியான சதுர துளைகள் 34 உடன்
ரூ. 12,500 தொடக்கம்



பிளாஸ்டிக் ஸ்பைரல் புக் பைண்டர்கள் அதிக கொள்ளளவு மற்றும் செயற்பாட்டுத்திறன் 21 துளைகள்
அலுவலக வேலைக்கு உகந்தது
ரூ. 13,000 தொடக்கம்

சகல விலைகளும் VAT உள்ளடக்கப்பட்டுள்ளன.

**இன்னும் அதிகமான உற்பத்திகள்:**

லெமினேட்டிங் பவுச் மற்றும் ரோல் (32-250 **Microns**).
கோல்ட் லெமினேட்டிங் ரோல் (18 **designs**).
பிளாஸ்டிக் மற்றும் உலோக பைண்டிங் வளையங்கள்/வயர்.
**Transparent** மற்றும் PVC புத்தக அட்டை (உட்புறம் விளங்கும்/உட்புறம் விளங்காதது).
அல்பம் கடதாசி மற்றும் ஐ. டி. கிளிப்கள்.

Tradlanka Advertising

வ/ப. நெஷானிஸ் (தனியார்) நிறுவனம், 251/1, கிருள வீதி, கொழும்பு 05. தொலைபேசி: 2502149/2368695

**Lamico Laminating Rolls & Pouches**

சிறப்பான தரம்மிக்க லெமினேட்டிங் பவுச்சுகள் மற்றும் லெமினேட்டிங் ரோல்கள் (32 மைக்ரோன்) இலங்கையில் லெமினேட்டிங் தொழில்நுட்பத்தின் முன்னோடிகளிடம் கிடைக்கிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வாடிக்கையாளர்களின் கொழும்பிலுள்ள போக்குவரத்து முகவருக்கு இலவசமாக விநியோகிக்கப்படும்.

**தரம் குன்றிய பொருட்களை வாங்கி நஷ்டப்படுவதை தவிர்த்து நேரடியாக எங்களிடமே மொத்த விலையில் சிறந்த தெரிவை பெற்றுக் கொள்ளலாம்.**

**நேஷானிஸ் (பிரை) லிமிட்.,
251/1, கிருல வீதி, கொழும்பு 05.
தொலைபேசி: 2368695, 2502149**

க:பொ.த உயர்தரம் சித்தியா? வேலை இல்லை என்ற கவலை வேண்டாம்.......

**TEACHERS TRAINING PROGRAM**
**பயிற்சியும் பணிநியமனமும்**

8ஆம் 9ஆம் பிரிவு கிழமை மற்றும் சனி ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்

கல்வித்தகுதி : க.பொ.த உயர்தரம் கட்டணம் : ரூபா 12000/·
அனுமதிக்கு இன்று (19.11.2005) சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்

பயிற்சியின்போதும் சொல்வளபயிற்சிக்கான 200 பக்க மொழிமாற்றப்பணிக்கு ரூபா 6000/- ஊதியம் வழங்கப்படும்
பயிற்சி முடிவில் கீழ்வரும் திணைக்களப்பணியிடங்களில் பணி நியமனம்

☐ ADMINISTRATION ☐ TEACHING ☐ WEB ☐ ENGLISH ☐ GENERAL KNOWLEDGE ☐ COMPUTING ☐ MINNAL ☐ QUIZ PORTAL ☐ LEARNING ACTIVITY DEVELOPMENT ☐ MULTIMEDIA ☐ JFFNA DIRECTORY ☐ MARKETING ☐ ADVERTISING ☐ GRAPHICS ☐ PLANNING ☐ MANAGEMENT ☐ GENERAL WORK ☐ OTHERS

வகுப்பில் 48 பேரே சேர்த்துக்கொள்ளப்பட உள்ளதால் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலேயே அனுமதி வழங்கப்படும்

**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna. Ph: 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph: 2229505

# தொகுதி ரீதியான முடிவுகள்

ஜனாதிபதித் தேர்தலின் யாழ்.தேர்தல் மாவட்ட முடிவு நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது தொகுதி ரீதியாக பிரதான வேட்பாளர்கள் இருவரும் பெற்ற வாக்கு விவரங்கள் வருமாறு:-

**வன்னி தேர்தல் மாவட்டம்:**

முல்லைத்தீவு
- மஹிந்த : 510
- ரணில் : 372

மன்னார்
- ரணில் : 20,463
- மஹிந்த : 2,183

வவுனியா
- மஹிந்த : 7,936
- ரணில் : 33,553

**திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்**

கல்முனை
- மஹிந்த : 8951
- ரணில் : 29,316

பொத்துவில்
- மஹிந்த :27,707
- ரணில் : 55,467

அம்பாறை
- மஹிந்த : 57,624
- ரணில் : 44,218

சம்மாந்துறை
- மஹிந்த :21,029
- ரணில் : 24,969

**கேகாலை தேர்தல் மாவட்டம்**

அரநாயக்க
- மஹிந்த : 18,391
- ரணில் : 18,906

கேகாலை
- மஹிந்த : 27,444
- ரணில் : 20,451

டெடிகம
- மஹிந்த : 32,231
- ரணில் : 30,391

ரம்புக்கன
- மஹிந்த : 24,559
- ரணில் : 20078

மாவனல்ல
- மஹிந்த : 25,701
- ரணில் : 32,203

தெரணியகல
- மஹிந்த : 22,653
- ரணில் : 22,087

கலிகமுவ
- மஹிந்த : 25,086
- ரணில் : 21,875

யட்டியாந்தோட்ட
- மஹிந்த : 25,080
- ரணில் : 26,056

ருவான்வெல
- மஹிந்த : 26,522
- ரணில் : 24,684

**மாத்தளை தேர்தல் மாவட்டம்**

மாத்தளை
- மஹிந்த : 20,945
- ரணில் : 29,639

லக்கல
- மஹிந்த : 23,637
- ரணில் : 22,249

தம்புள்ள
- மஹிந்த : 43,853
- ரணில் : 38,692

ரத்தோட்ட
- மஹிந்த : 25,551
- ரணில் : 31,449

**பொலனறுவ தேர்தல் மாவட்டம்**

மின்னேரியா
- மஹிந்த : 31,081
- ரணில் : 23,819

மெதிரிகிரிய
- மஹிந்த : 27,230
- ரணில் : 25,533

பொலனறுவ
- மஹிந்த : 47,188
- ரணில் : 44,951

**அனுராதபுரம் தேர்தல் மாவட்டம்**

மதவாச்சி
- மஹிந்த : 29,071
- ரணில் : 21,647

கலேவெவ
- மஹிந்த : 46073
- ரணில் : 33758

கெக்கிராவ
- மஹிந்த : 26220
- ரணில் : 24314

அனுராதபுரம் மேற்கு
- மஹிந்த : 31,575
- ரணில் : 29829

ஹொரவப்பொத்தானை
- மஹிந்த : 26,330
- ரணில் : 22,027

மிருந்தலை
- மஹிந்த : 22,454
- ரணில் : 16,897

அனுராதபுரம் கிழக்கு
- மஹிந்த : 33,726
- ரணில் : 25,382

**மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்**

பட்டிருப்பு
- மஹிந்த : 905
- ரணில் : 24,142

மட்டக்களப்பு
- மஹிந்த : 15,798
- ரணில் : 65,401

கல்குடா
- மஹிந்த : 11,105
- ரணில் : 28,482

**நுவரெலியா தேர்தல் மாவட்டம்**

கங்குராங்கெட்ட
- மஹிந்த : 20,725
- ரணில் : 27,061

வலப்பன
- மஹிந்த : 23,688
- ரணில் : 30,852

கொத்மலை
- மஹிந்த : 17,645
- ரணில் : 33,073

நுவரெலிய - மஸ்கெலிய
- மஹிந்த : 33,453
- ரணில் : 1,56,343

**புத்தளம் தேர்தல் மாவட்டம்**

சிலாபம்
- மஹிந்த : 36,115
- ரணில் : 37,372

ஆனமடுவ
- மஹிந்த : 38,002
- ரணில் : 30,358

புத்தளம்
- மஹிந்த : 19,939
- ரணில் : 40,060

நாத்தாண்டியா
- மஹிந்த : 29,227
- ரணில் : 26,367

வென்னப்புவ
- மஹிந்த : 33,040
- ரணில் : 32,191

**களுத்துறை தேர்தல் மாவட்டம்**

பாணந்துறை
- மஹிந்த : 46,097
- ரணில் : 33,034

மத்துகம
- மஹிந்த : 40,006
- ரணில் : 30,853

பேருவளை
- மஹிந்த : 37,402
- ரணில் : 37,390

பண்டாரகம
- மஹிந்த : 50,481
- ரணில் : 34,749

ஹொறண
- மஹிந்த : 44,801
- ரணில் : 34,300

புளத் சிங்கள
- மஹிந்த : 29,218
- ரணில் : 25,918

களுத்துறை
- மஹிந்த : 45,143
- ரணில் : 32,916

அகலவத்த
- மஹிந்த : 37,518
- ரணில் : 31,449

**இரத்தினபுரி தேர்தல் மாவட்டம்**

கலவான
- மஹிந்த : 24,463
- ரணில் : 18,740

இரக்குவானை
- மஹிந்த : 33,169
- ரணில் : 34,413

பெல்மடுல
- மஹிந்த : 26,511
- ரணில் : 27,178

எஹெலியகொட
- மஹிந்த : 37,243
- ரணில் : 29,255

பலாங்கொடை
- மஹிந்த : 35,410
- ரணில் : 34,049

இரத்தினபுரி
- மஹிந்த : 43,251
- ரணில் : 37,253

நிவிட்டிகல
- மஹிந்த : 34,569
- ரணில் : 29,987

**மாத்தறை தேர்தல் மாவட்டம்**

ஹம்புறுப்பிட்டி
- மஹிந்த : 37,641
- ரணில் : 19,771

ஹக்மண
- மஹிந்த : 40,567
- ரணில் : 22,366

தெவிநுவர
- மஹிந்த : 35,319
- ரணில் : 19,288

மாத்தறை
- மஹிந்த : 37,829
- ரணில் : 22,941

வெலிகம
- மஹிந்த : 40,027
- ரணில் : 24,225

தெனியாய
- மஹிந்த : 36,916
- ரணில் : 28,015

அக்குரச
- மஹிந்த : 41,091
- ரணில் : 25,103

**கொழும்பு தேர்தல் மாவட்டம்**

கொழும்பு மேற்கு
- ரணில் : 20,475
- மஹிந்த : 5,104

கொழும்பு கிழக்கு
- ரணில் : 28,832
- மஹிந்த : 14,919

பொரளை
- ரணில் : 25,784
- மஹிந்த : 15,644

மொரட்டுவ
- மஹிந்த : 47,048
- ரணில் : 43,207

கொழும்பு வடக்கு
- மஹிந்த : 14,270
- ரணில் : 45,161

கொழும்பு மத்தி
- ரணில் : 78,908
- மஹிந்த : 20,395

தெஹிவளை
- ரணில் : 24,660
- மஹிந்த : 18,005

மஹரகம
- மஹிந்த : 53,681
- ரணில் : 31,093

கொலன்னாவ
- மஹிந்த : 40,616
- ரணில் : 40,744

கடுவல
- மஹிந்த : 65,829
- ரணில் : 47,025

அவிசாவளை
- மஹிந்த : 41,936
- ரணில் : 36,227

கெஸ்பவ
- மஹிந்த : 42,042
- ரணில் : 66,660

இரத்மலான
- மஹிந்த : 25,004
- ரணில் : 23,743

கோட்டை
- மஹிந்த : 26,987
- ரணில் : 27,107

**பதுளை தேர்தல் மாவட்டம்**

காலிஎல
- ரணில் : 23,638
- மஹிந்த : 19,946

பதுளை
- ரணில் : 18,624
- மஹிந்த : 17,494

வெலிமடை
- மஹிந்த : 23,736
- ரணில் : 26,108

மகியங்கனை
- மஹிந்த : 26,877
- ரணில் : 32,592

பசறை
- மஹிந்த :15,717
- ரணில் : 25,176

வியலுவ
- மஹிந்த : 16,803
- ரணில் : 16,423

ஊவா - பரணகம
- மஹிந்த : 21,387
- ரணில் : 22,127

பண்டாரவளை
- மஹிந்த : 24,294
- ரணில் : 29,137

அப்புத்தள
- மஹிந்த : 15,856
- ரணில் : 25,935

**கம்பஹா தேர்தல் மாவட்டம்**

கம்பஹா
- மஹிந்த : 62,018
- ரணில் : 34,376

நீர்கொழும்பு
- மஹிந்த : 24,236
- ரணில் : 40,805

மீரிகம
- மஹிந்த :45,537
- ரணில் : 36,345

ஜாஎல
- மஹிந்த : 46,950
- ரணில் : 42,606

அத்தனகல
- மஹிந்த : 52,393
- ரணில் : 33,173

பியகம
- மஹிந்த : 43,249
- ரணில் : 34,685

திவிலுப்பிட்டிய
- மஹிந்த : 39,347
- ரணில் : 35,947

வத்தளை
- மஹிந்த : 31,446
- ரணில் : 40,984

கட்டான
- மஹிந்த : 49,095
- ரணில் : 40,473

களனிய
- மஹிந்த : 33,179
- ரணில் : 28,676

மெனுவாங்கொட
- மஹிந்த : 49,509
- ரணில் : 37,801

மஹர
- மஹிந்த : 54,759
- ரணில் : 37,772

தொம்பே
- மஹிந்த : 45,849
- ரணில் : 30,306

**காலி தேர்தல் மாவட்டம்**

கபரதுவ
- மஹிந்த : 35,002
- ரணில் : 22,164

பெந்தரஎல்பிட்டிய
- மஹிந்த : 38,779
- ரணில் : 25,767

அக்மீமன
- மஹிந்த :36,424
- ரணில் : 24,570

கினிதும
- மஹிந்த : 42,304
- ரணில் : 31,489

பலப்பிட்டிய
- மஹிந்த : 20,743
- ரணில் : 15,460

ரத்கம
- மஹிந்த : 34,259
- ரணில் : 21,330

அம்பலாங்கொடை
- மஹிந்த : 30,411
- ரணில் : 20,093

கரந்தெனிய
- மஹிந்த : 31,157
- ரணில் : 17,438

பத்தேகம
- மஹிந்த : 40,558
- ரணில் : 27,764

காலி
- மஹிந்த : 24,922
- ரணில் : 27,166

**கண்டி தேர்தல் மாவட்டம்**

கேவாகெட்ட
- மஹிந்த : 19,058
- ரணில் : 25,847

கண்டி (மகாநுகர)
- மஹிந்த : 9,435
- ரணில் : 17,130

தெனியாய
- மஹிந்த : 15,367
- ரணில் : 16,646

உடுநுவர
- மஹிந்த : 22,733
- ரணில் : 30,950

கலகெதர
- மஹிந்த : 17,453
- ரணில் : 20,177

குண்டசாலை
- மஹிந்த : 27,385
- ரணில் : 31,321

பாததும்பர
- மஹிந்த : 20,610
- ரணில் : 31,957

நாவலப்பிட்டி
- மஹிந்த : 28,544
- ரணில் : 29,882

கரிஸ்பத்துவ
- மஹிந்த : 43,540
- ரணில் : 59,899

உடதும்பற
- மஹிந்த : 19,973
- ரணில் : 20,269

செங்கடகல
- மஹிந்த : 22,670
- ரணில் : 28,894

யட்டிநுவர
- மஹிந்த : 27,428
- ரணில் : 27,791

கம்பொல
- மஹிந்த : 25,790
- ரணில் : 35,829

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

முல்ஹிரிகல
- மஹிந்த : 42,897
- ரணில் : 24,784

வெலியத்த
- மஹிந்த : 36,615
- ரணில் : 19,290

தங்கால
- மஹிந்த : 53,291
- ரணில் : 25,992

திஸ்ஸமகராம
- மஹிந்த : 63,197
- ரணில் : 40,006

**மொனறாகல மாவட்டம்**

மொனராகல
- மஹிந்த : 37,575
- ரணில் : 27,754

பிபில
- மஹிந்த : 28,663
- ரணில் : 22,103

வெள்ளவாய
- மஹிந்த : 54,066
- ரணில் : 39,117

(13 ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஆண் துவிச்சக் கர வண்டியும், பெண்களுக்குரிய துவிச்சக் கர வண்டியும் விற்பனைக்குண்டு. பார்வை யிடும் நேரம் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரையும் தொடர்புகளுக்கு: பொ.செல் வரத்தினம், 65 கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (42930)

## காணி விற்பனைக்கு

கோயில் வீதி, நல்லூரில் நல்ல சுற்றாட லில் 3 பரப்புக் காணி உடனடியாக விற்ப னைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: குட்டி மெக்கானிக், 45 புதியசிவன் வீதி, நல்லூர் T.P. 222 3826, 222 7172, 222 5363. (42931)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி வடக்கு, A9 பாதைக்கு அண் மையில் 3¼ பரப்புக் காணியில் சகல வசதியும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: S.ஜெயவீரசிங்கம், பங்களா வீதி, மீசாலை. T.P.: 077 6600271 (42720)

## சேவை

55000 அமெரிக்க விசா விண்ணப்ப முடிவு திகதி 04.12.2005 தாமதிக்காமல் விண்ணப் பிக்க முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, பாஸ்போட் அளவு போட்டோவுடன் ரூபா 400/-இற்கான மணியோடரை அனுப் புங்கள். குடும்பமாயின் மனைவி, பிள்ளைகளின் தனிப் போட்டோக்கள், பெயர், பிறந்த திகதி களையும் அனுப்பவும்.Penquin Book shop, $B_2/F_{23}$, Bloemendhal Flats, Kotahena. T.P.: 0773081764. (சி-46228)

## விற்பனைக்கு

வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட பழைய, புதிய வீடியோ கசற்றுகள் விற்பனைக்குண்டு. [யாவும் புதிய கொப்பிகள்]
தொடர்புகொள்ள :
**சாருஜன் கொமினிக்கேஷன்,**
கொக்குவில் சந்தி, கொக்குவில்.
T.P.: 29613200
(42924)(32-15-45-21)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப 8 இல் செவ் வாய், கிரகபாவம் 42, அனுஷம், வயது 36 உடைய பட்டதாரி நிர்வாக உத்தியோகத்தர் மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு விளம்பர இல.2753, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (42878)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42861)

புறொயிலர் 1Kg 160/- சுத்தம் செய்தது. 1Kg 240/- மற்றும் சேவல், கல்பேட் என்பன வும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 1)New R.S.K Farm, பெரியமதவடி, மானிப்பாய். றோட், உடுவில். 2) New R.S.K Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.(42901)

புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழி கள் தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மாஸ் வகைகளும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட் டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவ னார் வீதி, (42932)

## இன்றறக்ட் கழக உறுப்பினருக்கு

யாழ்ப்பாணம், நவ.19

இன்றறக்ட் கழகத்தின் உறுப்பினர்களுக்கு நடைபெறவிருந்த தலைமைத்துவப் பயிற்சி பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இன்றும், நாளையும் இடம்பெறவிருந்த இந்தத் தலைமைத்துவப் பயிற்சியே பிற் போடப்பட்டுள்ளதென நல்லூர் றோட்டரக்ட் கழகத்தின் தலைவர் தெரிவித்தார்.

(ஒ-14)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழா

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக மக்களின் விழிப்புணர்வு, அறிவு சமூகப்பணி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் பல்வேறுபோட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது. போட்டிகள் யாவும் அரசாங்க அதிபர்கள், திணைக்களங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் துணை கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்தும் போட்டிகளில் சிறந்த படைப்பாளி களுக்கும், சிறப்பாகச் செயலாற்றிவரும் உள்ளூர் நிறுவனங்களுக்கும், தெரிவுக்குழு வின் முடிவின் படி பெறுமதிவாய்ந்த பல பரிசில்கள் வழங்கப்படும்.

**போட்டிகள் தொடர்பான விவரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| இல. | போட்டிகள் நடைபெறும் மட்டங்கள் | போட்டி வகை |
|---|---|---|
| 01 | பல்கலைகழகங்கள் | ஆய்வுக்கட்டுரை |
| 02 | பாடசாலைகள் | ஓவியம், கட்டுரை |
| 03 | கிராம சேவகர் பிரிவுகள் | சிறந்த சமூக சேவையாளர் தெரிவு |
| 04 | வலயங்கள் | சிறந்த முன்பள்ளி தெரிவு |
| 05 | பிரதேச பிரிவுகள் | சுயமுயற்சியால் தற்காப்பு நிலையடைந்த சிறந்த வலுவிழந்தோர் தெரிவு |
| 06 | மாவட்டங்கள் | வீடியோ விபரண ஆவணம் தயாரித்தல், புகைப்படம் தயாரித்தல் |
| 07 | சிறுவர் இல்லங்கள் | அறிவுசார்ந்த போட்டிகள் |
| 08 | கிராமங்கள் | சிறந்த சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குழு தெரிவு |
| 09 | உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் | செயற்படுத்திவரும் சிறப்பான தொடர் திட்டத்தெரிவு |
| 10 | சிறுவர் இல்லங்கள் | சிறந்த சிறுவர் இல்லத்தெரிவு |
| 11 | நிறுவனங்கள் | சேவைக்கால நிலையிலான பணியாளர் தெரிவு |
| 12 | மாவட்டங்கள் | நவீன தொழில்நுட்ப பயன்பாடு |
| 13 | கடற்றொழில் பரிசோதகர்கள் | கடல் சார் போட்டிகள் |
| 14 | கிராமங்கள், மாவட்டங்கள் | கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள், ஏனைய விளையாட்டுப் போட்டிகள் |
| 15 | மாவட்டங்கள் | சிறந்த உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனம் தெரிவு |

போட்டிகள் நடத்தப்படும் காலம், ஏனைய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். எனினும் போட்டிகள் யாவும் 2006ஆம் ஆண்டு தைமாதமளவில் முடிவுபெறும் என தமிழர் புனர்வாழ்வுக் கழக 20ஆம் ஆண்டு நிறைவு விழாக் குழுவினர் தெரிவிக்கின்றனர். போட்டி நிபந்தனைகள் பற்றிய பூரண விவரங்கள் காலக் கிரமத்தில் பிரசுரிக்கப்படும்.

அதற்கு முன்பாக மேற்கூறப்பட்ட போட்டி நிகழ்வுகள் தொடர்பாக மேலதிகத் தகவல்களைப் பெற விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**திரு.ச.இராஜகோபால்,**
**இணைப்பாளர்,**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழா,**
**நடுவப் பணியகம்,**
**கிளிநொச்சி.**

தொலைபேசி 021 228 5956
மின்னஞ்சல் rajagopal @yahoo.Com
(சி-46260)(21.15.45)

## அரச அலுவலர் சங்கக் கூட்டம்

குருநகர், நவ.19

வடக்கு-கிழக்கு மாகாண அரச உத்தி யோகத்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வை.எம்.சீ.ஏ மண் டபத்தில் இச்சங்கத் தின் வடமாகாண இணைப்பாளர் இ.கி. இராசக்கோன் தலை மையில் நடை பெற வுள்ளது

இதில் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாநகரசபை ஆணையாளர் க. சிவஞானம் சிறப்பு விருந் தினராகவும், எஸ். இராமநாதன் கௌரவ விருந்தின ராகவும் கலந்து கொள்வார். (ஒ-51)

## கிளிநொச்சியில் மருத்துவர் சங்கக் கூட்டம்

வட்டக்கச்சி, நவ.19

கிளிநொச்சி மருத் துவர் சங்கத்தின் கூட் டம் இன்று சனிக் கிழமை மாலை 7 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை வைத்தியர் விடுதியில் நடை பெறவுள்ளது.

சகல அங்கத்தவர் களையும் இக் கூட் டத்தில் கலந்து கொள்ளுமாறு சங் கச் செயலாளர் வைத் திய கலாநிதி பா.யூடி ரமேஸ் ஜெயக்குமார் கேட்டுள்ளார்.

(ஒ-405-202)

## மாவீரர் தினப் போட்டிகள்

வட்டக்கச்சி,நவ.19

கிளிநொச்சி அரசி யல்துறையின் அனு சரணையுடன் தமிழீழ நுண்கலைப் பிரிவி னர் நாட்டிய நாடகம், வில்லிசைப் போட்டி களை நடத்தவுள்ள னர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு நடத்தப் படவுள்ள இப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் நடை பெறவுள்ளன.

(405-202)

## பயிற்சிப் பட்டறை

தென்மராட்சி,நவ.19

தென்மராட்சிப் பிரதேச கிராம் அலு வலர்களுக்கான பயிற் சிப் பட்டறை எதிர் வரும் 23ஆம் திகதி காலை 9 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத் தில் நடைபெறவுள் ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தின ரால் நடத்தப்பட வுள்ள இப்பயிற் சிப் பட்டறையில் பிர தேசத்தைச் சேர்ந்த அனைத்து கிராம அலுவலர் களையும் கலந்து கொள்ளு மாறு பிரதேச செய லர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(203-117)

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் கமநல சேவை நிலைய விற்பனை நிலையத்தின் (கொவிசெவன) இரவுக் காவலாளியாகக் கடமையாற்றிய

## ஐயம்பிள்ளை விநாயகமூர்த்தி

அவர்கள் 17.11.2005 இல் மரணமடைந்துள்ளார். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும்
கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்.
பெரும்பாக உத்தியோகத்தரும் கமலநல சேவைக்குழு உறுப்பினர்களும்,
உத்தியோகத்தர்களும்
கமநல சேவை நிலையம் நல்லூர்.
கமத்தொழில் காப்புறுதிச் சபை உத்தியோகத்தர்களும்.
(42936)(21.15.45)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## சா.சின்னத்துரை

திதி: 19-11-2005

பிறப்பு 05 - 02 - 1948 இறப்பு 30 - 11 - 2004


எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்த
அன்பு உடன்பிறப்பே!
எங்களை விட்டுப் பிரிந்து ஒரு வருடமாகிறது
நெஞ்சிருக்கும் வரை உன் நினைவிருக்கும்
அந்த நினைவினிலேயே நாங்கள் வாழ்ந்திடுவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி!

முள்ளாணை,
இளவாலை.
(42933)(26-15-45-21)

சகோதரி, சகோதரர்கள், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 08 - 06 - 1952



உதிர்வு 01 - 11 - 2004

அமரர் **செல்லையா வேலையா**

(வெள்ளைக்குட்டி)
திதி: 19.11.2005


குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்தீர்
குடும்பமே இன்று தவியாய்த் தவிக்கின்றதையா
ஆண்டு ஒன்று ஆகியே விட்டாலும்
ஈண்டு உமது உருவம் நெஞ்சை விட்டகலாது
ஓம் சாந்தி!

ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

என்றும் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.
(சி/46268)(26-21.15.45)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 09 - 06 - 1939



ஆண்டவன் அடியில் 20 - 10 - 2005

## திருமதி தங்கராஜா இராசலக்சுமி

(பெற்றி)

மாதம் ஒன்று வந்ததம்மா மாறிடுமா எம் துயரம்
ஆண்டொன்று சென்றாலும் ஆறிடுமா
- எம் கவலை
எம்முடனே அருகில் நீ இல்லையம்மா!
அந்தரத்தில் நிற்கின்றோம் அழைத்திட
ஓடி வாருங்கள் அம்மா!
எம் குலவிளக்கே! தெய்வமே! அம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளைகள்,
மருமகன்.

56,பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
(42938) (39.15.45.21)

# காலபோக நெற்செய்கை ஆரம்பித்ததால் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

புதுக்குடியிருப்பு,நவ.19

காலபோக நெற்செய்கை வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கமக்கார அமைப்புகளுடன் இணைந்து முன்னெடுத்துவருகின்றது.

கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளைக்கட்டி வளர்க்குமாறும் குறித்த மேச்சல் தரையிலேயே கால்நடைகளை மேச்சலுக்கு விடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கட்டாக்காலியாக விடப்படும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிவித்தல் பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கி ஊடாக வெளியிடப்படுகின்றது. இப்பணியில் பிரதேச கமக்கார அமைப்புகளும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் ஈடுபடுகின்றன.

(ஒ-353-202)

# கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 70 ஆயிரம் பனம் விதைகள் நடும் திட்டம்

விசுவமடு,நவ.19

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் கண்டாளைப் பிரதேச செயலர் பிரிவில் 70 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தின் ஆரம்ப வைபவம் சமீபத்தில் மயில்வாகனம் அ.த.க.பாடசாலையில் நடைபெற்றது.

நிறுவனத்தின் கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் காசிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ச.விநாயகமூர்த்தி திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

நிகழ்வில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

(ஒ-402-202)

# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

விசுவமடு,நவ.19

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் நிதியுதவியுடன் வேணாவில் ஊரக வளர்ச்சி நிலையம் வேணாவில் முருகானந்தா வித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி வேணாவில் ஊராக வளர்ச்சிப் பொறுப்பாளர் தமிழன்பன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஊரக வளர்ச்சிச் செயலாளர் க.கணேஸ், ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய உறுப்பினர் ஜிம்சன், வித்தியாலய அதிபர் செல்வநாயகம் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ஒ-402-202)

# கிராமிய அபிவிருத்தி வங்கி பரிசளிப்பு இன்று

பரந்தன்,நவ.19

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு

கிளிநொச்சி வன்னிச் செய்திகள்

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படிவங்கியால் நடத்தப்பட்ட சேமிப் புக்கணக்கில் இணைந்து குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வங்கி வாடிக்கையாளர்களான மாணவர்களுக்கும் இந்த நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.ஒ-352-202)

# வாடியடிச் சந்தையில் வெள்ளம்; வியாபாரிகள் இதனால் சிரமம்!

பூநகரி,நவ.19

பூநகரி, வாடியடிச் சந்தையில் வெள்ளம் நிறைந்துள்ளது. இதனால், சந்தை நடவடிக்கை சிரமமாக உள்ளதுடன் தொற்று நோய் பரவும் ஆபத்தும் ஏற்பட்டிருக்கிறது.

மேற்படி சந்தையில் பல கிராமங்களைச் சேர்ந்த மக்களும் தமது நுகர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்துவருகின்றனர். கடந்தகால இராணுவ நடவடிக்கையால் பல ஆண்டுகளாக இச்சந்தை இயங்கவில்லை. 2003ஆம் ஆண்டு மீள இயங்கத் தொடங்கிய இச்சந்தையில் பருவமழை காலத்தில் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது.

இதனால், மழை காலங்களில் சந்தை நடவடிக்கைகளில் பெருஞ் சிரமங்கள் ஏற்படுகின்றன. வெள்ள நீரால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதுடன் தொற்றுநோய் பரவும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது எனப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(த- 403-202)

# தமிழீழ வரலாறு போட்டிப் பரீட்சை

முழங்காவில்,நவ.19

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் 'தமிழீழ வரலாறும் சமூகக் கல்வியும்' போட்டிப் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த இப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-323-202)

# மீளக்குடியமர்வோருக்கு வீட்டுத்திட்டம்

ஒட்டுசுட்டான்,நவ.19

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக மன்னார்மாவட்டத்தில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. மன்னார் மாவட்டத்தில் இடம் பெயர்ந்து வாழும் மக்களை மீளக்குடியமர்த்தும் நோக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ரி.ஆர்.சி. நிறுவனத்தால் முதற்கட்டமாக 20 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(ஒ-341-202)



மாவீரர் நாளை முன்னிட்டு முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகமும் கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனமும் பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து இந்தச் சிரமதானப் பணிகளை மேற்கொண்டன.

(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# 'பசுந்தேசம்' ஒலிப்பேழை வவுனியாவில் அறிமுகம்

பரந்தன்,நவ.19

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சிறிகுகனின் இசையில் உருவாக்கிய 'பசுந்தேசம்' ஒலிப்பேழை வவுனியாவில் அறிமுகம் செய்யப்பட்டது.

கடந்த 14 ஆம் திகதி கனகராயன் குளத்திலுள்ள வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மண்டபத்தில் அறிமுகவிழா நடைபெற்றது.

வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் செ.ராகுலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை வவுனியா மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் சிறிஸ்கந்தராசா ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் ஏற்றினார்.

முதலாவது மாவீரர் லெப்ரினன்ட் சங்கரின் திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரினை சிவராசா ஏற்றினார். மலர் மாலையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நிதிப் பொறுப்பாளர் தெ.இந்திரன் அணிவித்தார்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.

ஒலிப்பேழையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா ஆகியோர் வெளியிட்டு வைக்க, வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஜெகநாதன், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மதிப்பீட்டுரையைத் தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா நிகழ்த்தினார்.

சிறப்புரையினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் வழங்கினார்.

பசுந்தேசப் பாடலாசிரியர் தே. கருணாநிதிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

தொடர்ந்து சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நடைபெற்றது.

வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தன.

2005 சிறுபோகத்தில், நெற்செய்கை, மாற்றுப் பயிர்ச்செய்கை என்பவற்றில் ஈடுபட்ட சிறந்த விவசாயிகளுக்குப் பரிசிலும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. விவசாய அறிவுப் போட்டியும் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுனப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-352-204)

# கிளிநொச்சி - கிராஞ்சி பஸ்சேவை இடைநிறுத்தப்படும் அபாயம்!

முழங்காவில்,நவ.19

கிளிநொச்சி - கிராஞ்சி பஸ் சேவை வீதி சீரில்லாமையால் இடைநிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பின்தங்கிய கிராமங்களான வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பிருந்தாவனம், மொட்டையன்குளம், பொன்னாவெளி, பாலாவி, மாதிரிக் கிராமம் ஆகியவற்றிற்கு கிளிநொச்சியிலிருந்து ஒரேயொரு பஸ்சேவை மட்டுமே நடைபெற்று வருகின்றது.

இந்தக் கிராமங்களின் வீதிகள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. சில வீதிகளில் வெள்ளம் நிரம்பி வழிகின்றன.

இதனால் பஸ்சேவை இடைநிறுத்தப்படும் நிலை தோன்றியுள்ளது.

(த-323-202)

# பனம்பொருள் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க பொருண்மியம் திட்டம்

## போட்டியும் கண்காட்சியும் நடத்த ஏற்பாடு

பரந்தன்,நவ.19

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பன்ன வேலையில் ஈடுபாடுடைய அனைவரையும் ஊக்குவிக்கும் பொருட்டு பனம்பொருள் உற்பத்திப் போட்டி மற்றும் கண்காட்சி என்பவற்றை நடத்தவிருக்கிறது.

பனை வளத்தை மூலமாக வைத்து மாற்றுப் பொருள்களை உற்பத்தி செய்து பயன்பாட்டுக்கு விடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு அமைவாக தமிழீழத்தில் பன்ன வேலையில் ஈடுபடும் உற்பத்தியாளர்களும் பயிற்சியாளர்களும் தமது திறமைகளை வெளிக்காட்டக் களமாகவும் அவர்களது திறமைகளை ஊக்குவிக்கும் முகமாகவும் இந்தப் போட்டியும் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர், தமது பன்னவேலை உற்பத்திப் பொருள்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் வட்டக்கச்சியிலுள்ள பொருண்மிய நடுவப் பணியகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஒப்படைக்கப்படும் பொருள்களுக்கான போக்குவரத்துச் செலவுகளைப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கி ஊக்கம் அளிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-352-204)

# நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட மக்களுக்கு அறிவுறுத்து

பரந்தன்,நவ.19

மழைகாலம் ஆரம்பித்து உள்ளதால் வன்னிப் பிரதேசத்தில் நோய்க்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் சகல மக்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

பருவமழை தற்போது பெய்துவருகிறது. இதனால் பள்ளங்கள், குழிகளில் வெள்ளம் தேங்கிநிற்கும். இதுமட்டுமன்றி, பாவித்த தகரப் பேணிகள், இளநீர்க் கோம்பைகள், வெற்றுப் போத்தல்களில் மழை நீர் தேங்கி நிற்கும்.

இதனால், மலேரியா நுளம்புகள் பெருகி, பல நோய்களைப் பரப்பும்.

நோயிலிருந்து விடுபட மக்கள் சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வெற்றுப் போத்தல்கள், கோம்பைகளை எரித்து அல்லது புதைத்துவிட வேண்டும். வெள்ளநீர்தேங்கி நிற்கும் கிடங்குகளை மூடிச் சுகாதாரம் பேண நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கொதித்தாறிய நீரைப்பருகி சுத்தத்தைப் பேணுவதன் மூலம் தொற்று நோய்களிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று சுகாதாரச் சேவையினர் அறிவித்துள்ளனர். (த-352-204)

# தொலைபேசி இணைப்புகளில் கோளாறு

கிளிநொச்சி நகரில் தொலைபேசி இணைப்புகளில் அடிக்கடி இடையூறு ஏற்படுவதால் மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர். நகரில் கடந்த சில நாள்களாக தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்படுகின்றன. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையெனப் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஒ-352-202)

# கோயில்புளியங்குளம் கிராமத்தின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

புளியங்குளம்,நவ.19

கோயில் புளியங்குளம் கிராமத்தின் அபிவிருத்திக்கென 'நிகொட்' திட்டத்தின் கீழ் ரூபா 48 லட்சத்து 84 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கில் அமைந்துள்ள இக்கிராமத்தின் அபிவிருத்திப் பணிகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் நடைமுறைப்படுத்திவருகின்றனர்.

சுயதொழில் கடன், மானிய அடிப்படையில் மலசலகூடங்கள் அமைத்தல், பொதுக்கிணறுகள், குளங்கள் புனரமைத்தல், விவசாயப் பொருள்கள் வழங்கல் போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.


எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் இத்திட்டம் பூர்த்தியடையும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-355-202)



ஆனையிறவு, சுண்டிக்குளம் நன்னீர் மற்றும் தாயகப் பிரதேசங்களிலுள்ள பறவைகள் சரணாலயங்களில் பறவைகளைத் துன்புறுத்துவது, வேட்டையாடுவது போன்றவற்றிற்கு தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவகம் தடைவிதித்துள்ளது. இது தொடர்பான அறிவித்தல் பலகையொன்றைப் படத்தில் காணலாம்.

(படம்: பரந்தன் செய்தியாளர்.)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்



தோற்றம்
01 - 05 - 1931

மறைவு
23 - 10 - 2005

## அமரர் க.சி.குகதாசன் (குகன்)

*(முன்னாள் அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, தலைவர், வெளிக்கள நிலையம்)*

தொண்டைமானாறு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், அரசடி வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் குகதாசன் அவர்கள் 23.10.2005 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரத்தில் ஆழ்ந்த தேசியத் தலைவர் அன்னாருக்கு அவரின் கல்வி மற்றும் சமூகப் பணியைப் பாராட்டி ''நாட்டுப்பற்றாளர்'' என்னும் உயரிய கௌரவத்தை வழங்கியமையை நாம் மனமகிழ்ச்சியுடன் ஏற்று தலைவருக்கும் விடுதலைக்காக அர்ப்பணித்த அனைவருக்கும் முதற்கண் நன்றியைத் தெரியப்படுத்துகின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் அஞ்சலி செலுத்தியோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், மின்னஞ்சல், தொலைபேசி, தந்தி, கடிதமூலம் அனுதாபச்செய்தி தெரிவித்தவர்களுக்கும் இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும் மற்றும் அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிறப்புற நடத்த உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் அன்னாருக்கு தேசியக் கொடி போத்துக் கௌரவித்தமைக்கும், யாழ்.இந்துக் கல்லூரி கொடி போர்த்துக் கௌரவித்தமைக்கும் யாழ்.இந்து சமூகம் அன்னாருக்கு மலர் அஞ்சலி செலுத்தி அவரது உடலைத் தலைமேல் சுமந்து கௌரவித்தமைக்கும் நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னார் சுகவீனமுற்று இருந்தபோது அவருக்கு உதவிய சத்திரசிகிச்சை நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் மருத்துவபீட மாணவர்களுக்கும் எமது நன்றியைத் தெரியப்படுத்துகின்றோம்.

நாளை (20.11.2005) ஞாயிற்றுக்கிழமை நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெறும் கிரியை நிகழ்வுகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

70/10, அரசடிவீதி,
யாழ்ப்பாணம். (42929) (39-32-14)

**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## இளையவி செல்வராசா
(சின்னத்தம்பி)

தோற்றம்
07-04-1944

மறைவு
01-12-2004

''வாழ்வில் வழிகாட்டி ஒளியூட்டி
எம்மை வாழ வைத்த தெய்வமே!
புதுமுகம் பல வந்து சென்றாலும்
உங்கள் முகம் என்றுமே மறையப்
- போவதில்லை''

சூராவத்தை,
சுன்னாகம். (42906)(32-14)

**குடும்பத்தினர்.**

## மாதிரி வாக்குச்சீட்டுகள் வைத்திருந்த மூவர் கைது

பேருவளை,நவ.19

பயாகலை பொலீஸார் ஹல்கந்தவில, மக்கொனை ஆகிய இடங்களில் மாதிரி வாக்குச் சீட்டுக்களுடன் மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

வாக்குச் சாவடிகளுக்கு அருகே மாதிரி வாக்குச்சீட்டுகளைத் தம்வசம் வைத்து வாக்காளர்களுக்கு இடையூறு விளைவித்த குற்றத்தின் பேரில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

களுத்துறை மாவட்டத்தில் வாக்களிப்பு மிக சுறுசுறுப்பாகவும் அமைதியாகவும் இடம்பெற்றது. 7 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு பகல் 12 மணியையடையும் போது 60 சதவீதமான வாக்குகள் பதியப்பட்டன. அசம்பாவிதச்சம்பவங்கள் இடம் பெறவில்லை. முஸ்லிம் பகுதிகளில் காலை முதல் மாலை வரை வாக்களிப்பு சுறுசுறுப்பாகக் காணப்பட்டது.

## மாவிட்டபுரத்தில் திருக்கார்த்திகை ஆராதனை

யாழ்ப்பாணம், நவ.19

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் திருக்கார்த்திகை ஆராதனா வைபவம் டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து விஷேட கிருத்திகை பூஜை, ஷண்முகார்ச்சனை, வீதியுலா என்பன இடம்பெறும்.

மாவிளக்கேற்றும் அடியார்களின் வசதிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலய ஆதீன கர்த்தா தெரிவித்தார்.

(ஒ-202)

## கல்முனையில் மௌலவி சுட்டுக்கொலை

கல்முனை, நவ.19

கல்முனையில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் மௌலவியொருவர் படுகாயமடைந்தார். பின்னர் அவர் மரணமானார்.

சுலைமான் லெப்பை ஒமர் (வயது-34) என்ற மௌலவியே சுடப்பட்டார். கல்முனைக்குடியிலுள்ள தனது வீட்டிலிருந்து கல்முனைக்கு சைக்கிளில் அவர் சென்று கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யார் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தினார்களெனத் தெரியவில்லை. ஆனால், தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவைச் சீர்குலைக்கும் வகையில் சில தீய சக்திகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கக் கூடுமென்று தெரிவிக்கப்படுகிறது.

கல்முனை பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(க)

# 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




கார்த்திகைக்குமார் - சுனித்தா தம்பதியரின் அருந்தவப் புதல்வன் **சியாநந்** தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று (19.11.2005) சனிக்கிழமை சுவிஸில் உள்ள அவரது இல்லத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பும் ஆசையும் மிக்க அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, உதிச்சித்தப்பா (ஜேர்மனி), றூபிச் சித்தி, நந்தன் சித்தப்பா (கனடா), கார்த்திகா சித்தி, பெரியப்பா, பெரியம்மா, ஜெயந்தன் மாமா, பவானி அத்தை, மச்சான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எங்கள் குலதெய்வமாகிய சிவபூதவராயர் அருள்பெற்று பல்லாண்டு காலம் சகல சௌபாக்கியங்களுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
**அப்பா, அம்மா.**

வொகேசன் ஸ்ராசா - 110
4056 பாசல்
சுவிஸ்.

(சி/46265)(42-32-14)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




உதவி அரசாங்க அதிபர் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த திரு.திருமதி **விக்கினேஸ்வரன் - வாகேஸ்வரி தம்பதியினரின் செல்வப் புதல்வி கர்ஷா** அவர்கள் இன்று (19.11.2005) சனிக்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, தாத்தா, பாட்டி பெரியப்பா (லண்டன்), பெரியம்மாமார், (லண்டன், ஜேர்மனி), தம்பி ரஜீவ் (லண்டன்), மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சுன்னாகம் புவனேஸ்வரி அம்பாளினதும் கந்தரோடை அருளானந்தப்பிள்ளையாரினதும் அருளாசியுடன் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

**தகவல்: தீபன்-பிரபு**
(குட்டிமாமா)
*சுன்னாகம்.*
*T.P.: 0776647471*

(42907)

# வாழ்த்துகின்றோம்



சிறந்த சமூக சேவையாளரென
தேசிய விருதினையும் சர்வதேச
விருதினையும் பெற்றுக்கொண்ட
இலங்கை செஞ்சிலுவைச் சங்க
பருத்தித்துறைக் கிளையின் தலைவர்
**சூரியகாந்தி தவராசா**
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

அல்வாய் வடக்கு.
(சி-46264)(21-32-14)

**ச.அன்னலிங்கம்
குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## பே.மனுவல் மார்க்ஸ் வில்பிரட்



குருநகரைப் பிறப்பிடமாகவும் கூழாவடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பே.மனுவல் மார்க்ஸ் வில்பிரட் அவர்கள் 18.11.2005 அன்று வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுறு மனுவல்-ஆரோக்கியம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஜோன்-மரியமுத்து தம்பதியரின் மருமகனும் திரேசம்மாவின் அன்புக் கணவரும் றூபினா (நோர்வே), றேவா (சவூதி), றூபன் (நோர்வே), றேமன்ட் (நோர்வே), விற்றி (நெதர்லாந்து), றஜூ ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபிரான் (நோர்வே), பத்மசேகர் (சவூதி), வினற் (நோர்வே), மோனா (நோர்வே), ராஜா (நெதர்லாந்து), குயின்ரன் (யா.மா.க.கூ.ச. சம்மேளனம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அத்தீனா, அர்ஜுன், அருண், அலன், ஆன்சி, டானியல், பிறேபன், பேர்வின், றெஜினோல்ட், ஜறீன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மனவல் றேமு வோல்டர் மற்றும் மனவல் விக்ரர் ஏனஸ்ற் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (19.11.2005) சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தில் இடம்பெறும். இரங்கற் திருப்பலியின் பின்னர் ஆனைக்கோட்டை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குறோரியக்ஸ், கூழாவடி,
ஆனைக்கோட்டை.* (42925)(32-14)

தகவல்:
**திரு.திருமதி குயின்ரன்.**

யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில்

# வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை தேசிய கலை, இலக்கியப் பெருவிழா

யாழ்ப்பாணம்,நவ.19

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன், யாழ்ப்பாண மாவட்டச்செயலகம் ஏற்பாடு செய்துள்ள தேசிய கலை, இலக்கியப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் தோறும் நடத்தப்பட்ட தேசிய கலை, இலக்கிய விழாக்களின் தொகுப்பு நிகழ்வாக மாவட்ட மட்டத்திலான இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டஅரச அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல், வடக்கு -கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க. பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்வர்.

மங்கள விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை, முதன்மை விருந்தினர் உரை என்பனவற்றைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

சொற்பொழிவைத் தொடர்ந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தெரிவுசெய்யப்பட்ட கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பின்னர், தேசிய கலை, இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும். என யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார்.

(எ-202-203-204)

## ஊர்காவற்றுறை நகரில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு

ஊர்காவற்றுறை நகரில் நேற்றிரவு 7 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

'ஹெல்மட்' அணிந்து கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஊர்காவற்றுறை நகரில் நின்ற ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். எனினும், இந்தச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் மீதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-16)

# இரு இளைஞரின் சடலங்கள் வாழைச்சேனையில் மீட்பு!

ஏறாவூர்,நவ.19

மட்டக்களப்பு,வாழைச்சேனை பஸ் நிலையத்திற்கு அருகில் வெட்டிக்கொலை செய்யப்பட்ட நிலையில் இரண்டு வாலிபர்களின் சடலங்களைப் பொலீஸார் நேற்றுக்காலை மீட்டெடுத்துள்ளனர்.

கண்கள் மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையில் வெட்டுக்காயங்களுடன் இந்தச் சடலங்கள் காணப்பட்டன. சடலங்கள் அடையாளம் காண்பதற்காக அவை வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் முதலில் ஒப்படைக்கப்பட்டன.

ஏறாவூர் கலைமகள் வித்தியாலய வீதியைச் சேர்ந்த சின்னலெப்பை நாஸர் (வயது - 33) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை கொல்லப்பட்டவர்களில் ஒருவராவார். முன்னாள் ஊர்காவலரான இவர் கடந்த ஓகஸ்ட் 28ஆம் திகதி ஏறாவூர் ஆற்றங்கரை வீதியில் வைத்து கடத்தப்பட்டார்.

கொலையுண்ட மற்றவர் பள்ளியடி வீதி ஏறாவூரைச் சேர்ந்த மீரா சாகிபுகாலீத் (வயது -32) என அடையாளம் காணப்பட்டார். இரு பெண்குழந்தைகளின் தந்தையாரான இவர் வெளிநாடுகளுக்கு ஆள்களை அனுப்பும் உப முகவராகத் தொழில்புரிந்து வந்தவர். கடந்த ஒக்டோபர் 23 ஆம் திகதி செங்கலடி - கொம்மாதுறை வீதியில் வைத்து இவர் கடத்தப்பட்டார் எனக்கூறப்பட்டது. இவர்களின் ஜனாசாக்கள் அடக்கம் செய்யப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் இந்த வாரத்தில் மட்டும் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட ஐந்து பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் நால்வரின் சடலங்கள் கைகள் மற்றும் கண்கள் கட்டப்பட்ட நிலையில் வீதிகளில் போடப்பட்டிருந்தன என்பது குறிப் பிடத்தக்கது.

(ஐ-க-190)

## தொகுதி ரீதியான முடிவுகள்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### திருகோணமலை மாவட்டம்

| | |
|---|---|
| **சேருவில** | |
| ✱ மஹிந்த | : 21,353 |
| ✱ ரணில் | : 17,835 |
| **திருகோணமலை** | |
| ✱ மஹிந்த | : 10,878 |
| ✱ ரணில் | : 41,369 |
| **மூதூர்** | |
| ✱ மஹிந்த | : 18,817 |
| ✱ ரணில் | : 21,061 |

### குருநாகல்

| | |
|---|---|
| **கல்கமுவ** | |
| ✱ மஹிந்த | : 37,876 |
| ✱ ரணில் | : 30,720 |
| **கிரியால** | |
| ✱ மஹிந்த | : 30,785 |
| ✱ ரணில் | : 31,412 |
| **பிங்கிரிய** | |
| ✱ மஹிந்த | : 30,624 |
| ✱ ரணில் | : 29,941 |
| **தம்பதெனிய** | |
| ✱ மஹிந்த | : 37,231 |
| ✱ ரணில் | : 29,818 |
| **பொல்காவெல** | |
| ✱ மஹிந்த | : 27,851 |
| ✱ ரணில் | : 25,317 |
| **குருநாகல்** | |
| ✱ மஹிந்த | : 28,791 |
| ✱ ரணில் | : 29,564 |
| **நிக்கவரட்டிய** | |
| ✱ மஹிந்த | : 32,978 |
| ✱ ரணில் | : 29,692 |
| **யாப்பகூவ** | |
| ✱ மஹிந்த | : 40,136 |
| ✱ ரணில் | : 34,469 |
| **வாரியப்பொல** | |
| ✱ மஹிந்த | : 29,155 |
| ✱ ரணில் | : 22,919 |
| **பண்டுவஸ்நுவர** | |
| ✱ மஹிந்த | : 26,365 |
| ✱ ரணில் | : 25,456 |
| **கட்டுகம்பொல** | |
| ✱ மஹிந்த | : 35,311 |
| ✱ ரணில் | : 31,580 |
| **குளியாப்பிட்டிய** | |
| ✱ மஹிந்த | : 34,357 |
| ✱ ரணில் | : 33,874 |
| **மாவத்தகம** | |
| ✱ மஹிந்த | : 29,513 |
| ✱ ரணில் | : 28,658 |
| **தொடங்கஸ்லந்த** | |
| ✱ மஹிந்த | : 24,658 |
| ✱ ரணில் | : 21,100 |

## கண்ணீர் அஞ்சலி

எமது கிளையின் உதவி முகாமையாளர்

### பொ. சச்சிதானந்த ஐயர் அவர்களின்

திடீர் மறைவால் துயருறும் அவர்களது குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள் வங்கி,
பருத்தித்துறை.
(42958)
(33-54-11-17)
முகாமையாளரும்,
ஊழியர்களும்.

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 - 09 - 1934



இறப்பு 30 - 11 - 2004

### அமரர் தம்பிஐயா சின்னாச்சி

(திதி: திருதியை)

அன்பாலும் பண்பாலும் அனைவரையும்
அணைத்தீர்கள்! அன்பு மழை
பொழிந்தீர்கள்! அம்மா எங்களை
விட்டகன்று ஓராண்டு சென்றாலும்
ஈரவிழிகள் மாறவில்லை. - எம்
அம்மாவே! உங்களுக்கு நிகர் யார்
எங்கள் நெஞ்சம் இருக்கும் வரை
உங்கள் நினைவு இருக்கும் அம்மா.

நிரந்தர முகவரி- பலாலி கிழக்கு.
தற்காலிக முகவரி- தோப்பு. அச்சுவேலி.
(42951)
(17-54-11-17)
மகன், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.












## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுந்தரலிங்கம் மங்களேஸ்வரி



வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் மங்களேஸ்வரி நேற்று (18.11.2005) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.
(42956)
(54-11-17)
தகவல்:
குடும்பத்தினர்.

### அருளம்பலம் சிவஞானம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர்),

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவினை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் சிவஞானம் அவர்கள் நேற்று (18.11.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம்-தங்கம்மாவின் அன்பு மகனும் குலசிங்கம், அமரர் காராளசிங்கம், புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, அமரர் குலசேகரம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், ரவிந்திரா, லோகேந்திரா ஆகியோரின் மாமனாரும் சியாமளா, கௌரி, திருச்செந்தில், ஜெயபாரதி, தரமேஸ், உதயா ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2005) சனிக்கிழமை ஊரெழுவில் உள்ள அரவது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 3 மணியளவில் தகனக் கிரியைக்காக பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
(42955)
(54-)
தகவல்:
கு. புனிதவதி
(சகோதரி).

### திருமதி நடராசா பொன்னம்மா



ஊரங்குனை, கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி நடராசா பொன்னம்மா நேற்று (18.11.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் (கிளி) அன்புத் தாயாரும் காலஞ்சென்ற செல்வலக்ஸ்மி மற்றும் சறோஜாவின் மாமியாரும் செல்வராஜ் (பிரான்ஸ்), செல்வரஞ்சினி (கனடா), சசிக்குமார், செல்வரஜனி, செல்வதாஸ், செல்வறோஜினி, செல்வராஜினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று (18.11.2005) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44/16 A, மணற்தரை வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(42957)
(54-11-17)
தகவல்:
ந.செல்வரத்தினம் (கிளி)
(மகன்).




## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த
திரு.திருமதி சுஜேந்திரன் சுபாஜினி தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
சு. அபிஷன்

தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று (19.11.2005) சனிக்கிழமை பி.ப.5 மணியளவில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அபிஸ் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, ஆசை மாமா (லதன்), அன்புச் சித்தி (கமலினி) மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவரும் நோய் நொடியின்றி பல்கலையும் பெற்று ஸ்ரீ காமாஷி அம்மன் அருளால் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

82A, சீனியர் லேன்,
கலட்டி.
(42950)
(54-11-17)
தகவல்
அம்மப்பா, த.கணேசமூர்த்தி
(சுருவில் கணேஸ்),
566/4, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## அம்பாறையில் புலிகள் வீரச்சாவு என அறிவிப்பு

கடந்த 14 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் தேசவிரோதிகள் நடத்திய தாக்குதலின் போது போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

லெப். கேணல் முகிலன் அல்லது சுரேஷ் (பழனிவேல் ஜெயக்குமார் - திருக்கோயில் அம்பாறை), கப்டன் புன்னகையன் அல்லது வெள்ளை (யோகநாதன் ஜெனார்த்தனன் - வாழைச்சேனை, மட்டக்களப்பு) ஆகியோரே இவ்வாறு வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## மந்திகையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவர்கள் தகவல் வெளியிட்டனர்.

எனினும், இத்தகவலை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. சம்பவத்தை அடுத்து மந்திகை -பருத்தித்துறைப் பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டன. பஸ்,மினிபஸ் சேவைகளும் நிறுத்தப்பட்டன. இதனால், பருத்தித்துறை - மந்திகைப் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இச்சம்பவத்தின்போது அப்பகுதியில் நின்ற சில இளைஞர்கள் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-70-78-86-111-173-410)

## ஜனாதிபதியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கிலுள்ள தமிழர்கள் வாக்காளிக்காமல் தேர்தலைப் பகிஷ்கரித்தமையே ஐக்கிய தேசிய க் கட்சி வேட்பாளரின் தோல்விக்குப் பிரதான காரணமென்று அரசியல் விமர்சகர்கள் நேற்று உறுதியாகத் தெரிவித்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ 1 லட்சத்து 80 ஆயிரத்து 786 மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றதைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

வடக்கு - கிழக்கில் தேர்தல் இடம்பெற்ற விதம் தொடர்பில் வெளிநாட்டுத் .தேர்தல் கண்காணிப்பாளர்கள் தமது அதிருப்தியை நேற்று வெளியிட்டனர். இதன்படி, வடக்கு - கிழக்கில் மீளத் தேர்தலொன்றை நடத்துமாறு, ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தேர்தல் ஆணையாளரைக் கோருமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும், தேர்தல் சட்ட திட்டங்கள் தொடர்பான சட்ட ஆலோசனைகளுக்கு அமைய அந்த முயற்சி கைவிடப்பட்டது.

நேற்று தேர்தலின் இறுதி முடிவை அறிவிப்பதற்காக அனைத்து வேட்பாளர்களையும் தேர்தல் ஆணையாளர், தேர்தல் செயலகத்திற்கு அழைத்திருந்தார். ஐ.தே.க. வேட்பாளரைத் தவிர பெரும்பாலும் இதர அனைத்து வேட்பாளர்களும், ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களெனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

தேர்தல் அமைதியாகவும், நீதியாகவும் நடத்த ஒத்துழைத்த அனைவருக்கும், தேர்தல் ஆணையாளர் அங்கு நன்றி தெரிவித்தார்.

அந்த முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதை அடுத்து புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு பற்றிய விடயங்கள் அரச உயர் மட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இன்று பிற்பகலில் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வு ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும்.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷவைப் பதவிப் பிரமாணம் செய்துவைப்பார்.

பதவி விலகிச் செல்லும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் மூத்த அமைச்சர்கள், அரசியல் பிரதிநிதிகள், வெளிநாட்டு ராஜதந்திரிகள் எனப் பல பிரமுகர்களும் இந்த நிகழ்வில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-க)

IIS
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006
விண்ணப்பித்து விட்டீர்களா?
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
விண்ணப்ப முடிவுத்திகதி 20.11.2005
இயக்குநர்
IIS ,யாழ்ப்பாணம்

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனவெறியாக மாற்றியதே எங்களுடைய தேசியத் தலைமை உருவாகக் காரணமாக அமைந்தது. அதாவது, பிரபாகரன் அவர்கள் உருவாகுவதற்கு பண்டா அவர்கள் காரணமாக இருந்தது உண்மை.

அதுபோலவே மஹிந்தவின் வெற்றியானது பிரபாகரனின் வெற்றிக்கான வாய்ப்பாக அமையப்போகிறது. தொடங்கப்பட்டது அந்தப் பண்டாவால், முடிக்கப்பட உள்ளது இந்த மஹிந்த பண்டாவால்.

ஆகவே பண்டா சகாப்தம் என்று மஹிந்தவும் பொருத்தமாகத்தான் கூறியிருக்கின்றார்.

சிங்கள மக்களுக்கு இவர் என்ன செய்யப் போகிறார் என்பதை எதிர்காலம் கூறப் போகின்றது.

பலபேர் கூறுவதுபோல் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் உள்ள முரண்பாடு மிகக் கூர்மையாக முற்றி இன்னொரு மிகப்பெரிய கிளர்ச்சி அல்லது கலகம் அல்லது ஊழி விபத்தாக மாறப்போகிற ஆபத்தை நோக்கி சிங்களம் செல்கிறது என்பதில் எங்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

அந்த வகையில் தமிழ் மக்கள் தங்களுடைய பாதுகாப்பை எந்தவகையில் உருவாக்கிக் கொள்ளவேண்டும். தமிழ் மக்கள் அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதெல்லாம் மிக ஆழமாகவும் நுணுக்கமாகவும் சிந்திக்கவேண்டிய கட்டத்தில் எங்கள் மக்கள் வாழ்கிறார்கள். ஆகவே, இந்த அரசியலைக் கூர்மையாகப் பார்க்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. - என்றார் க.வே.பாலகுமாரன். (ஐ)

## தேர்தலில் தமக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பாராத மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. சமாதானம் தொடர்பான சரியான விளக்கத்துடன் என்னை ஆதரித்தவர்களுக்குச்சிறிது ஏமாற்றத்தையும், சமாதானம் தொடர்பான பிழையான விளக்கத்துடன் மஹிந்தவை ஆதரித்தவர்களுக்கு மகிழ்ச்சியையும் கொண்டு வந்துள்ளது.

இந்தத் தேர்தலில் நான் சொற்ப வித்தியாசத்தில் தோல்வியுற்றதால், இதனை ஒரு தோல்வியென ஏற்கமுடியாது. சமாதானத்திற்கு எதிராக விடுக்கப்பட்ட சவால் என்றே கருதவேண்டும்.

சமாதானம் தொடர்பான பிழையான நிலைப்பாட்டுடன் மக்கள் மஹிந்தவை ஆதரித்ததால் தான் நான் இந்தத் தோல்வியை எதிர்கொண்டேன். இருந்தும், சமாதானத்தை விரும்பி என்னை ஆதரித்தவர்களுக்கு எனது நன்றி.

வடக்கு - கிழக்கில் மக்கள் வாக்களிக்க விருப்பம் கொண்டும் அவர்கள் வாக்களிக்க விடாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றே நாம் அறிகிறோம். இது ஜனநாயகத்தை மீறும் செயலாகும். வடக்கு-கிழக்கு மக்களை வாக்களிக்க அனுமதித்திருந்தால் உண்மையில் வெற்றிபெறுவது யாரெனத் தெரிந்திருக்கும்.

இந்த நிலையில், சமாதானம் தொடர்பாக 3 மாதத்திற்குள் அனைவருடனும் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து புலிகளுடன் பேச்சு நடத்தப்போவதாக மஹிந்த ராஜபக்ஷ கூறுவதை எந்தளவுக்கு சாத்தியம் என்று சொல்ல முடியாது.

அதேவேளை, சமாதான முன்னெடுப்பு தொடர்பாக மஹிந்தவுக்கு ஐ.தே.கவினர் ஆதரவை வழங்குவதாக இருந்தால் ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை மஹிந்த முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்திற்கும் மஹிந் தவின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்குமிடையில் அதிக வேறுபாடுகள் உள்ளன. சமாதான முன்னெடுப்பு தொடர்பாக நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தின்படியே செயற்பட விரும்பு கிறோம்.

அவ்வாறு நாம் செயற்படுகையில் இரண்டு கட்சிகளுக்குமிடையில் பிரச்சினைகள் வர இடமுண்டு. ஆகவே, சமாதான முன்னெடுப்பு தொடர்பாக மஹிந்தவுக்கு எமது ஆதரவு தேவைப்படுமிடத்து எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை அவர் முற்றாக ஏற்றுக்கொண்டால் நாம் மஹிந்தவுக்கு எமது ஆதரவை வழங்குவோம்.

சமாதான முன்னெடுப்பு தொடர்பான மஹிந்தவிடம் தெளிவான கொள்கையிருப்பதாகத் தெரியவில்லை. இது அம்முயற்சியில் பாரிய தாக்கத்தை உண்டுபண்ணும். ஆகவேதான் இது தொடர்பாக எமது ஆதரவு தேவைப் படின் சமாதானம் தொடர்பான சரியான நிலைப்பாட்டை உள்ளடக்கியிருக்கும் எமது விஞ்ஞாபனத்தை ஏற்க அவர் வேண்டும் எனக் கூறுகிறேன்.

- இவ்வாறு ரணில் கூறினார். (ஐ-க)

நாங்கள் பெயர் பாமா ஈரல் பிரச்சினைகளான
சைரோசிஸ், மஞ்சள் காமாலை, மஹோதரம்
என்பவற்றிற்கு பயனளிக்கும் வைத்தியத்தை தருகின்றோம்
ஈரல் பிரச்சினையா?
(LIVER COMPLICATIONS?)
இலவச ஆலோசனைகள் - நேரிலோ தொலைபேசி மூலமோ
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 9.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் பகல் 2.00 மணி வரை
மருந்து பற்றி விபரங்கள் கிடைக்கும்
FAIR PHARMA (PVT) LTD
(Manufacturers of Ayurvedic Medicines)
L5/ET/1C, World Trade Centre, Colombo 01.
Tel : 094-11-5517897, 5551879, 5558442 Fax : 0094-11-5517756
Website : www.fppvtl.org E-mail : fppvtl@lankabellnet.com
A BOI Approved & ISO 9001:2000 QMS Certified Company

## வடக்கு - கிழக்கில் வாக்களிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் இரு வெவ்வேறு நிலைமையைக் குறிப்பிட விரும்புகிறோம்.

வடக்கில் பிரதானமாக வாக்காளர்கள் மீது தலையீடு இருந்தது. இது பல வடிவங்களிலும் காணப்பட்டது. வாக்களிப்பு நிலையங்களுக்கு மக்கள் செல்லும் விடயத்தில் அவர்களின் ஆர்வத்தைக் குறைக்கும் போஸ்டர்களும், கையேடுகளும் விநியோகிக்கப்பட்டமையும் இதில் அடங்கும்.

இது யாழ்ப்பாணத்தில் குறைந்தளவு வாக்களிப்புக்கே இட்டுச் சென்றது. உதாரணத்திற்கு பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குத் தொகையில் ஆகக்குறைந்த 1.5 வீதம் யாழ்ப்பாணத்தில் பதிவாகியுள்ளது.

கிழக்கிலும் அவ்வாறுதான். புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு போக்குவரத்துக்காக வழங்கப்பட்ட பஸ்கள், படகுகள் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அவர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு அவர்கள் செல்வதற்காகவே அரசால் இந்தப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அத்தோடு, தேர்தல் தினத்திற்கு முந்திய இரவும், தேர்தல் தினத்தன்று முழுவதும் வன் முறைகளும் இடம்பெற்றன. இவை பயங்கர நிலைமையைத் தோற்றுவித்தன. தேர்தல் நிலை யங்களுக்கு மக்கள் செல்வதையும் இந்த வன்முறைகள் தடுத்து நிறுத்தின.

நடந்த வன்செயல்கள் மிகவும் பாரதூரமானவைகளாகும். அவற்றில் மோசமானவை வருமாறு:-

- 16 ஆம் திகதி மட்டக்களப்பு பார் வீதியில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்திற்கு மாலை 6.30 மணிக்கு கிரனேட் வீசப்பட்டது.
- 16ஆம் திகதி மாலை 7 மணிக்கு கல்முனை, பாண்டிருப்பில் முஸ்லிம் ஒருவர் சுட்டுக்காயப்படுத்தப்பட்டார்.
- 16 ஆம் திகதி இரவு கல்முனையைச் சேர்ந்த அல்ஹாஜ் அஹ்மத் லெப்பை கல்முனை நகரில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 16 ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு மட்டக்களப்பு இருதயபுர வாக்களிப்பு நிலையத்திற்கு கிரனேட் வீசப்பட்டது. அதில் மூன்று இராணுவத்தினர் காயமுற்றனர்.
- 16ஆம் திகதி 8.30 மணிக்கு மட்டக்களப்பு கூளாவடிக்கொலணி வாக்களிப்பு நிலையத்திற்கு வீசப்பட்ட கிரனேட்டில் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிளும் ஓர் இராணுவச் சிப்பாயும் காயமடைந்தனர்.
- 17 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு மட்டக்களப்பு பலைமீன்மடு வாக்களிப்பு நிலையத்திற்கு கிரனேட் வீசப்பட்டது.
- 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. அலுவலகம் மூன்றிக்கு-சாவகச்சேரி, மல்லாகம், மானிப்பாயில் இருந்தவை- கிரனேட்டுகள் வீசப்பட்டன.
- 17 ஆம் திகதி மட்டக்களப்பு நகரில் உள்ள வாக்கு எண்ணும் பிரதான நிலையமான இந்துக் கல்லூரி நிலையத்திற்கு கிரனேட் வீசப்பட்டது.
- 16 ஆம் திகதி இரவு புதுநகர் பொலீஸ் நிலையத்திற்கு கிரனேட் வீசப்பட்டது.
- 16 ஆம் திகதி இரவு விக்னேஸ்வரா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கு கிரனேட் வீசப்பட்டது.
- 16 ஆம் திகதி இரவு 9.30 மணிக்கு மட்டக்களப்பு சந்திவெளி விநாயகர் கல்லூரிக்கு கிரனேட் வீசப்பட்டது.
- 17ஆம் திகதி செங்கலடி மகாவித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கு (கொத்தணி வாக்களிப்பு நிலையத்திற்கு) கிரனேட் வீசப்பட்டது. அதில் இரு பொலீஸார் மற்றும்14 வயதுச் சிறுவன் அடங்கலாக ஆறு பேர் காயமுற்றனர்.
- 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு களுதாவளை மகாவித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் கிரனேட் தாக்குதல் இடம்பெற்றது.
- காத்தான்குடியில் ஆள்மாறாட்டம் செய்தார் எனச் சந்தேகிக்கப்பட்ட ஒருவரை விடுவிக்க மறுத்தமைக்காக உதவிப் பொலீஸ் அத்தியட்சகரும், அவரது சாரதியும் ஐ.தே. கட்சி ஆதரவாளர்கள் எனத் தெரிவிக்கப்பட்ட ஒரு குழுவால் தாக்கப்பட்டனர்.
- 17ஆம் திகதி காலை வாழைச்சேனை இந்து மகாவித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கு கிரனேட் வீசப்பட்டது.
- 17ஆம் திகதி மாலை வாழைச்சேனை இந்து மகாவித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கு மீண்டும் கிரனேட் வீசப்பட்டது.

மேலே உள்ள இந்த நிகழ்ச்சிகளின் பின்னணியில், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், தேர்தல்கள் ஆணையாளரான தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி உண்மையாகவே நீதியானதும், நியாயமானதுமான தேர்தலை உறுதி செய்து இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தலை மீண்டும் வடக்கு - கிழக்கில் நடத்துமாறு கோருகிறது.

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் 103(2) பிரிவு சுதந்திரமானதும் நியாயமானதுமான வாக்களிப்பு நடத்தையை உறுதி செய்வதற்கான ஆணையை ஆணையாளருக்கு வழங்குகிறது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

இது நீங்கள் நன்கு அறிந்தது போல் 1981 ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல், 1988 ஆம் ஆண்டின் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் தொடர்பில் விசேடமாக தேர்தல் முடிவை பாதிக்கும் சூழ்நிலைகளாகும்.

அவசர நிலைமையில், அல்லது எதிர்பாராத சூழலில் ஒரு மாவட்டத்தின் தேர்தல் வாக்களிப்பு கருத்தில் கொள்ளப்படமாட்டது எனக் குறிப்பிடும் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 21(2) பிரிவின்பாலும் உங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

வன்செயல் சூழல், வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் 17 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்ற தலையீடு என்பனவற்றைக் கருத்திற்கொண்டு, சட்டத்தால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு மீண்டும் வாக்களிப்புக்கு அழைப்பு விடுப்பதை கருத்திற்கொள வீர்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். - என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் சார்பில் இணை அழைப்பாளர்களான கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து, அனிதா அசோகராஜா அம்மையார், சீதா ரஞ்சனி அம்மையார் ஆகியோர் இந்த அறிக்கையில் ஒப்பமிட்டுள்ளனர். (ஐ-க)

புதிய வீடியோ கிராபிக்ஸ் வெளியீடுகள்
Title, Background DVD, Software Video Effects.
T.P. 0777 917610

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேயின் புதிய அரசில் சர்வதேச அபிவிருத்தி அமைச்சராக விளங்கும் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு நோர்வே அரசின் சார்பில். தமது வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார் என்று கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் நேற்றிரவு அறிவித்தது.

எல்லா இலங்கை மக்களினதும் எதிர்பார்ப்புக்கு அமைய சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது உட்பட சகல விடயங்களிலும் புதிய ஜனாதிபதியுடன் நெருக்கமாகச் செயற்பட நோர்வே விரும்புகிறது - எதிர்பார்க்கின்றது - என்று எரிக் சொல்ஹெய்ம் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மஹிந்தவுக்கு மக்கள் வாக்களித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள எரிக்சொல்ஹெய்ம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை காப்பாற்றவும் விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுகளை முன்னெடுக்கவும் சர்வதேச சமூகம் உறுதியாக ஒத்துழைப்பு வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையில் இருதரப் பினரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அனுசரணையாளர் பணியை மேற்கொண்டு வரும் நோர்வே தொடர்ந்து இனப்பிரச்சினையில் குறிப்பிடத்தக்க வகையில் செயற்பட உறுதியளிப்பதாகவும் எரிக் சொல்ஹெய்ம் கூறியதாக நோர்வே தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

BIT Bachelor of Information Technology
Semester III & V
BIT கற்கைநெறிக்கான
Semester III மற்றும் V ற்கான
விரிவுரைகள் எதிர்வரும் 19.11.2005
சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு
ஆரம்பமாகவுள்ளன.
Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna
T.P : 021 222 8060

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.